The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11-16.)

புத்தகம் 16. | மே 1918. | இலக்கம் 5.

LITURGICAL AND HOMILETIC NOTES.

தேவ சடங்கையும் தேவ வாக்கியத்தையும் பற்றிய குறிப்புகள்.

மரித்த மூன்றாம் நாள் கல்லறையை விட்டெழுந்தருளின நமதாண்டவர் உடனே மோட்சத்துக்குப் போகாமல் நாற்பது நாள் பரியந்தம் இவ்வுலகத்திலிருந்து, பல தருணங்களில் பிரத்தியட்சமாய் தம்மைத் தம் அப்போஸ்தலர்களுக்குக் காட்டி, நாற்பதாம் நாள் மோட்சத்துக் காரோகணமானார். இவ் வேத சத்தியங்களை நமக்கு ஞாபக மூட்டுமாறு சத்திய திருச்சபை நமது கர்த்தர் மோட்சத்துக் காரோகணமான திருநாளை வருஷா வருஷமும் கொண்டாடி வருகின்றது. மேலும், பெரிய சனிக்கிழமையன்று மந்திரிக்கப்பெற்று, பிறகு வரும் பிரதி ஞாயிற்றுக்கிழமையிலும் பெரியபூசை நேரத்தில் கொளுத்தப்பட்டு, கர்த்தர் மோட்சத்துக் கெழுந்தருளின திருநாளன்று பூசையில் சுவிசேஷம் வாசித்தான பிறகு நிறுத்திவிடப்படும் பாஸ்கு வர்த்தியும் ஷை சத்தியங்களையே நமக்கு ஞாபகப்படுத்துகின்றது. அதெப்படியெனில், பாஸ்கு வர்த்தியானது மரணத்தை ஜெயித்து மகிமைப் பிரதாபத்துடன் கல்லறையைவிட் டெழுந்தருளின நமதாண்டவருக்கு அடையாளமாமே. நாற்பது நாள் வரையிலும் ஞாயிற்றுக்கிழமைகள்தோறும் பெரியபூசைநேரத்தில் அது கொளுத்தப்படுவதானது நமது கர்த்தர் அப்போதைக்கப்போது தம்முடைய சீஷர்களுக்குக் காணப்பட்டதற்குக் குறிப்பாமே. இந்தத் திருநாளன்று அதை அணைத்துவிடுவதானது அவர் மோட்சத்துக்கு எழுந்தருளினதற்கு அறிகுறியாமே.

*
* *

தாம் உயிர்த்த நாற்பதாம் நாள் நமதாண்டவர் மோட்சத்துக்கு ஆரோகணமானதற்குக் காரணமென்ன? அவருக்கிஷ்டமிருந்திருந்தால் நாற்பது நாளுக்கு அதிகமாக அல்லது குறைவாக இவ்வுலகத்திலிருந்திருக்கலாமல்லவா? ஆயினும், அவர் நாற்பதாம் நாள் மோட்சத்துக் கெழுந்தருளினார். அதேனென்றால், அவர் நம்முடைய இரட்சண்ய அலுவலைத் துவக்குவதற்கு முந்தி, அல்லது தம்முடைய சத்தியவேதத்தையாவருக்கும்பிரசித்தமாய்ப் போதிப்பதற்கு முந்தி, எப்படி நாற்பது

நாள் வனாந்தரத்தில் ஒதுங்கியிருந்து, ஜெப தபத்தினால் அதற்காக ஆயத்தஞ் செய்தாரோ, அப்படியே அவர் உயிர்த்தபிறகும் தாம் சம்பாதித்த இரட்சண்ய பேறு பலன்களுக்கு நம்மை திருச்சபையின் மூலமாய்ப் பங்காளிகளாக்க, செய்யவேண்டிய வழி வகைகள், ஏற்பாடுகள் முதலியவற்றைச் செய்வதற்காக நாற்பது நாள் பூலோகத்திலிருக்கத் திருவுளமானார். இதற்கு இன்னோர் காரணம் யாதெனில், தாம் சிலுவைமரத்தில் மெய்யாகவே மரணமானதையும், பிறகு மரித்தவர்களிடத்தில் நின்று தாம் உயிர்த்ததையும் அவர் நமக்கு எண்பித்துக்காட்டச் சித்தங்கொண்டதேயாம். இதைக் குறித்து மகா பெரிய வேதசாஸ்திரியாகிய அர்ச். தோமாஸ் அக்குயினாஸ் "சேசுக்கிறீஸ்துநாதர் தம்முடைய மரணத்தை மெய்ப்பிக்க நாற்பது மணி நேரம் கல்லறையி லிருந்ததுபோலவே, தம்முடைய உத்தானத்தையும் மெய்ப்பிக்க நாற்பது நாள் வரையிலும் உலகத்திலிருந்தார்" என்கிறார். ஆம், நமது கர்த்தர் சிலுவையில் உயிர் விட்டமாத்திரத்தில் உயிர்த்து உடனே மோட்சத்துக் காரோகணமாயிருந்திருந்தால், அவருடைய மரணத்தைப் பற்றியும் உத்தானத்தைப்பற்றியும் சந்தேகிக்க இடமுண்டாயிருக்கும். ஆனால் அவர் நாற்பது மணி நேரம் கல்லறையில் அடக்கஞ் செய்யப்பட்டிருந்தது எப்படி அவருடைய மரணத்துக்கு மறுக்கப்படாத அத்தாட்சியா யிருக்கின்றதோ, அப்படியே அவர் நாற்பது நாள் உலகத்திலிருந்ததும் அவருடைய உத்தானத்துக்கு உண்மையான சாட்சியாயிருக்கின்றது. ஆகவே, அவரும் இந்த நாற்பது நாட்களுக்குள் தம்மை அடிக்கடி அவர்களுக்குப் பிரத்தியட்சமாய்க் காட்டினதுமல்லாமல் அவர்களுடன் சம்பாஷித்தும், பிரயாணஞ் செய்தும், இன்னும் சாப்பிட்டும் வந்தார். மேலும அவர்கள் தம்மைத் தொட்டுஸ்பரிசித்துப் பார்த்து தாமே அவர்களுடைய ஆண்டவரென்றும், உபாத்தியாயரென்றும் தங்களுக்குள் நிச்சயித்துக்கொள்ளவுஞ் செய்தார். உயிர்த்த நமது கர்த்தர் இப்பிரபஞ்சத்தில் நாற்பது நாள்வரையிலுமிருந்ததானது நம்முடைய விசுவாசத்துக்கு மாதாரமாயும்அஸ்திவாரமாயுமிருப்பதுடன் அவரே அநேக தருணங்களில் தாம் தேவகுமாரனென்றும் உலக இரட்சகரென்றும் திருவுளம்பற்றினதையும் உண்மையென்று எண்பித்து காட்டுகின்றது. நமதாண்டவரான சேசுநாதசுவாமி நாற்பதுநாளளவாக இவ்வுலகத்திலிருந்ததற்கு வேறொரு காரணம் யாதென்றால், பூர்வம் இஸ்ரவேலர் தாங்கள் அடிமைப்பட்டுக் கிடந்த எஜிப்து தேசத்தைவிட்டு செழிப்பும்செல்வமும் பொருந்திய கானான்தேசத்துக்குப் போவதற்கு முந்தி 40-வருஷகாலம் எப்படி வனாந்தரத்திலிருந்து துன்பப்பட்டார்களோ, அப்படியே நாமும் நம்முடைய கர்த்தரின் மரணத்தினாலும் உத்தானத்தினாலும் பசாசினுடையவும் பாவத்தினுடையவும் அடிமைத்தனத்தி லிருந்து மீட்கப்பட்டபோதிலும், மெய்யான கானான் தேசமாகிய மோட்ச இராட்சியம் போய்ச் சேரும் வரையிலும் இக் கண்ணீர் கணவாயில் பல இடுக்கண் துன்பங்களைப் பட்டனுபவிக்கவேண்டுமென்று நமக்குப் படிப்பிக்கத் திருவுளமானதேயாம்.

* * *

கர்த்தர் மோட்சத்துக் காரோகணமான திருநாள் கடன் திருநாளாகும். மேலும் அது மாறுந் திருநாட்களிலொன்று. ஆனபடியால் அது பிரதி வருஷமும் கர்த்தர் உயிர்த்த 5-ம் ஞாயிற்றுக்கிழமைக்குப் பிறகு வரும் வியாழக்கிழமையிற் கொண்டாடப்படும். கர்த்தர் உயிர்த்த திருநாளிலிருந்து இத் திருநாள் வரையிலுமுள்ள நாட்களை எண்ணிப்பார்த்தால் சரியாய் நாற்பது நாளென்று தெரியவரும். இவ்வருஷம் இத் திருநாள் இம்மாதத்தின் 9-ம்தேதியாகிய வியாழனன்றுகொண்டாடப்படும். நமது கர்த்தர் நமக்காக பாடுபடத் துவக்கின நாள் பெரிய வியாழக்கிழமையல்லவா? அன்றையத்தினத்தில்தான் அவர் பூங்காவனத்தில் இரத்த வியர்வை வியர்த்தது; அன்றையத்தினத்தில்தான் அவர் குருத்துரோகியான யூதாஸால் காட்டிக்கொடுக்கப்பட்டு, யூதர்களால் பிடிபட்டது. தாம் எந்தத்தினத்தில் நமக்காகப் பாடுபடத் துவக்கினாரோ அந்தத் தினத்திலேயே மரணத்தையும் பசாசையும் வென்று ஒட்டோலகராய் மோட்சத்துக்கெழுந்தருளச் சித்தமானார். ஆனபடியால் தான் இந்தத்திருநாள் வியாழக்கிழமையிற் கொண்டாடப்படுகிறது. இதில் நாம் படித்

தறிந்துகொள்ளவேண்டிய நல்ல பாடம் ஒன்றுண்டு. அது யாதெனில், என்றையத் தினத்தில் நமக்குத் துன்பங்களை யனுப்ப சர்வேசுரன் சித்தங்கொள்ளுகிருரோ அன்றையத்தினத்திலேயே அவர் அவைகளுக்கான சம்பாவனையையும் நமக்குக் கொடுக்க ஆயுத்தஞ் செய்கிருர். என்றையத்தினம் நாம் அதிகமதிகமாய்த் தாழ்த்தப்படுகிருரேமோ அன்றையத்தினமே நம்முடைய இரட்சண்யத்தின் துவக்கமும் அந்த நாளே நம்முடைய இரட்சண்யத்துக்குக் காரணமுமா யிருக்கின்றது. இது உண்மையென்று நமக்கு எண்பித்துக்காட்ட எத்தனையோ ஆயிரம் அர்ச்சியசிஷ்டவர்களிருக்கிருர்களென்ருலும், சேசுசபையை உண்டாக்கின அர்ச். இஞ்ஞாசியாரே இதற்கு ஓர் நல்ல அத்தாட்சியாயிருக்கின்ருர். பம்பேலூனுகோட்டையினுடைய முற்றுகையின்போது இவரைத் தாக்கின குண்டால் இவருடைய காலொடிந்து வைத்தியசாலையில் சிகிச்சை செய்யப்பட்டு வந்த துன்பகாலந்தான் இவர் மனந்திரும்பவும் ஓர் பெரிய அர்ச்சியசிஷ்டவராகவும் காரணமா யிருந்தது. ஆகையால் நமக்குத் துன்பங்கள் வரும்போது அவைகளைப்பற்றி முறையிடாமல் அவைகளை நல்ல மனதுடனும் பொறுமையுடனும் சகித்து வருவோமானுல், அவைகள் நம்முடைய இரட்சண்யத்துக்கு வழியுங் காரணமுமா யிருக்கும். அர்ச். அகுஸ்தீன் சொல்லி யிருக்கிறபடி துன்பங்கள் நம்மைக் குணப்படுத்தும் மருந்தும், பத்திய பரிகாரமுமா யிருக்கின்றனவே யன்றி, நம்மை சாகடிக்கும் தண்டனையும் சிட்சையுமா யிருக்கின்றனவல்ல.

* * *

நமது கர்த்தர் மோட்சத்துக் காரோகணமான வேளை மத்தியான வேளையாமே. அதேனென்ருல், மத்தியானத்திலேயே சூரியன் தான் அடையவேண்டிய வானமண்டலத்தின் உச்சியை அடைகின்றது. இப்படியே நீதியாதித்தனுகிய நமதாண்டவரும் மத்தியான வேளையில் பரலோகத்துக்கெழுந்தருளினதினுல், தாம் அடையவேண்டிய மகிமைப் பிரதாபத்தின் உச்சியை அடைந்தாரென்று நாம் தெரிந்துகொள்ள வேண்டியதாமே. "அந்தி சந்தி மத்தியான வேளையிலும் (என் குறைகளை) உரைத்து அறிக்கையிட்டுக்கொள்வேன். என் மன்ருட்டை அவர் கேட்டருள்வார்" (54-ம் சங். 18-ம் வசனம்) என்று தாவீது இராசா பாடினதை அர்ச். அகுஸ்தீன் வியாக்கியானித்துச் சொல்லி யிருப்பதாவது: "மாலை நேரத்தில் ஆண்டவரைச் சிலுவையிலும், காலை நேரத்தில் உத்தானத்திலும், மத்தியான நேரத்தில் ஆரோகணத்திலும் நான் காண்கிறேன். இதனுல் சாயந்தர வேளையில் மனிதனுகி மரிக்கும் கடவுளுடைய பொறுமையையும், காலை வேளையில் அவருடைய உத்தானச் சீவியத்தையும் நான் ஞாபகப்படுத்திக்கொண்டு, மத்தியான வேளையில், பிதாவின் வலதுபாரிசத்தி லுட்கார்ந்திருக்கிற அவரை நோக்கி என்னுடைய மன்ருட்டுகளுக்குச் செவிசாய்க்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" என்பதேயாம். ப்ராஸ்பர் என்னும் இன்னேர் புண்யாத்துமா சொல்லியிருக்கிறபடி, ஒரு நாளின் முப்பொழுதையும் நாம் பரிசுத்தப்படுத்தும்படியாகவே மாலையில் நமதாண்டவர் சிலுவையில் உயிர்விடுகிருர். காலையில் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தருள்கிருர். மத்தியானத்தில் மோட்சத்துக் காரோகணமாகிருர். ஆனபடியால் பிரதிதினமும் நாம் காலையிலும் மாலையிலும் நம்முடைய ஆத்தும ஈடேற்றத்துக்கடுத்த காரியங்களை நினைவுகூர்ந்தவர்களாய் காலைமாலை ஜெபங்களையும் ஆத்துமசோதனை முதலிய நற்கிருத்தியங்களையும் செய்யத் தவறப்படாது. மேலும் மத்தியான வேளையில் திரிகால ஜெபத்தையாவது செபிக்க பிரயாசப்படுவோமாக.

* * *

நமது கர்த்தர் மோட்சத்துக் காரோகணமான விடம் ஒலிவேத்து மலையாம். இம் மலைக்கும் ஜெருசலேம் பட்டணத்துக்குமுள்ள தூரம் 2,000 தப்படி அல்லது சுமார் அரை மைல் தூரம். இதற்கும் ஜெருசலேமுக்கும் இடையில் ஓர் பள்ளத்தாக்குண்டு. இப்பள்ளத்தாக்கில் சேத்ரோன் என்னும் சிற்ருறென்று பாய்கிறது. இம்மலையிலிருந்து ஜெருசலேம் பட்டணத்தை யாரும் நன்ருய்ப் பார்க்கலாம். இம் மலையின்மேல்தான் நமதாண்டவர் வழக்கமாய் இராக்காலத்தில் தங்கி, விழித்திருந்து ஜெபஞ் செய்வார், இவ்விடத்தில்

தான் பெரிய வியாழக்கிழமை இரவு இரத்தவியர்வை வியர்த்து துக்கசாகரத்திலமிழ்ந்தித் தம்முடைய பிதாவைநோக்கி வேண்டிக்கொண்டார். அவர் பரலோகத்துக்காரோகணமாவதற்கு தாம்வழக்கமாய் ஜெபஞ் செய்துவந்த இம்மலையையே தெரிந்துகொள்ளச் சித்தங்கொண்டதினால், நாமும் மோட்ச இராச்சியஞ் சேர ஜெபத்தையே உதவிக்கொள்ள வேண்டுமென்று நமக்குக் கற்பிக்கிறார். அர்ச். அல்போன்சுஸ் என்பவர் சொல்லியிருக்கிறபடி, இப்போது நரகவேதனைக்குள்ளாகி யிருக்கிறவர்கள் ஜெபத்தை அலட்சியஞ் செய்தவர்களாம். அவர்கள் மாத்திரம் அடிக்கடி ஜெபஞ் செய்திருந்தால் நித்திய கேட்டுக்குள்ளாயிரார்கள். மோட்சத்தில் இப்போதிருக்கிறவர்கள் ஜெபஞ் செய்வதில் சுறுசுறுப்புடையவர்களா யிராதிருந்திருந்தால் தாங்களடையவேண்டிய பரிசுத்தத்தனத்தையு மடைந்திரார்கள், மோட்ச இராச்சியத்தைச் சுதந்தரித்து மிரார்கள். ஆம், ஞானஸ்நானத்துக்குப் பிறகு நாம் மோட்சமடைய ஜெபமே அத்தியாவசியம். அதேனென்றால், ஜெபத்தி னுதவியின்றி, நம்முடைய இரட்சண்ய அலுவலை நாம் நிறைவேற்ற முடியாது. நாம் பாவிகளாயிருந்தால் பரிசுத்தத்தனத்தை யடைய ஜெபமே அவசியம். நாம் புண்யவான்களாயிருந்தால் புண்யத்தில் மென்மேலும் உயரவும் ஜெபமே அவசியம். ஜெபஞ் செய்யாதவன் இரட்சண்ய மடையானென்பது நிச்சயம். ஆகையால் ஜெபத்தைக்கொண்டே நாம் மோட்சஞ் சேரவேண்டுமென்று நமக்குப் படிப்பிக்க, நமது கர்த்தர் தாம் பாடுபடத்துவக்கின வேளையிலும் அதற்கு முந்தியும் வழக்கமாய் ஜெபித்துவந்த ஒலிவேத்து மலையிலிருந்து மோட்சத்துக்காரோகணமானாரென்று அறிந்துகொள்வோமாக.

சச்சிதானந்த ஏக கர்த்தாவாகிய சேசுநாதருடைய திருவடியை நாடிப்போகையில் பூமியின் அநித்திய பொருளாகிய வீடுகள், சோலைகள், பூமி கொண்ட அழியுந் திரவியங்களின்மே லாசைப்பட்டு சிற்றின்பந் தேடுவாயாகில் அவருடைய ஒளியு மஞ்ச சங்கடங்கள் நேரிடும்.

—(அர்ச். சிலுவை அருளப்பர்.

SISTER MARY ASSUNTA.

மரி அசுன்தா சகோதரி.

(மரியாயின் பிரான்சிஸ்கன் மிஷனரி கன்னிகை.)

1878—1905.

அற்பக்காரியம் அற்பந்தான், ஆயினும் அற்பக்காரியத்தில் பிரமாணிக்கமாயிருத்தல் அற்பமன்று.

இத்தாலியா தேசத்தின் அல்பான் மலைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள (Grottaferata) குரோத்தா பெராத்தா என்ற ஓர் ஊரில், அர்ச். ரோசா என்றழைக்கப்படும் மரியாயின் பிரான்சிஸ்கன் மிஷ்னரி கன்னியர்களின் மடம் ஒன்றுண்டு. இதில்தான் 1898-ம் வருஷத்தில் தாழ்ச்சியில் விளங்கிய அசுன்தா சகோதரிபரிக்ஷயந்தஸ்தில் சேர்க்கப்பட்டாள். இச்சகோதரியின் பரிசுத்த சீவியத்தை தமிழ் கிறீஸ்துவர்களுக்குப் பயன்படுமாறு சுருக்கமாய் எழுதித்தருவதே நமது நோக்கம்.

மரி அசுன்தாவின் சீவியத்தில் உன்னத செயல்களும் அற்புத சம்பவங்களும் கிடையாது. அவள் தன் சகோதரிகளின் மதிப்பையும் வணக்கத்தையும் பெற்றது பரலோக தெரிசனங்களாலும் காட்சி பரவசங்களாலும் அல்ல. அவளுடைய சீவியமானது அனுதினம் அநுசரித்துவந்த தாழ்மையான புண்ணியங்களினால்தான் துலங்கிப் பிரகாசித்தது. அவள் மறைவிலும் தாழ்மையிலும் சீவித்து வந்ததாலும், அவளிடம் மனிதர் கண்களுக்குப் பகட்டானதும் வியக்கத்தக்கதுமான அரிய பெரிய சம்பவமில்லாததாலும், எல்லோருமே புண்ணிய சாங்கோபாங்கத்தைத் தழுவி யநுசரிக்க ஆசையும், தைரியமும் ஊக்கமும் கொள்ள அவள்சீவியம் ஏற்றதாயிருக்கின்றது.

அர்ச். கிளாரா, தெரேஸா, கத்தரீனாளைப் போன்ற கன்னிகா ரத்தினங்கள் அர்ச்சியசிஷ்டதனத்தின் உன்னத பதவியில் வீற்றிருந்து துலங்குகிறார்கள். அவர்களைப் பின்பற்றி ஒழுகுதல் சாமான்ய கிறீஸ்துவர்களுக்கு சாத்தியப்படுவதாகத் தோன்றவில்லை. ஆனால் சர்வேசுரனுடைய

அநுக்கிரகத்தால் கஷ்டமின்றி அசுன்தா சகோதரியின் புண்ணிய மாதிரிகைகளைப் பின்பற்றலாம். அவளைப்போல் சேசுவை நேசிக்கலாம்.

பிள்ளைக்குரிய விசுவாசத்திலும், உத்தம கீழ்ப்படிதலிலும், தாழ்ச்சியிலும் அவளைக் கண்டு பாவிக்கலாம். நீதியின்பேரில் பசி தாகமுள்ளவர்களும், பரலோக இராச்சியத்துக்காக சிறு பிள்ளைகளாக விரும்புகிறவர்களும்தான் இந்த இத்தாலியா மாதின் நன்மாதிரிகையினின்று புதிய பலத்தையும்தைரியத்தையும் அடைவார்களென்பதற் கையமில்லை.

1878-ம் வருஷம், ஆகஸ்ட் மாதம் 20-ம் தேதி, மரி அசுன்தா லிபெராத்தா பல்லோத்தா (Liberata Pallotta) என்பவள் போர்ஸ் என்னும் ஊரில் தன் தாய் வீட்டில் பிறந்தனள். அவள் பிறந்த சில வாரங்களுக்குப் பின்னர் காஸ்தெல் தீ குரோச்சே (Castel di Croce) என்ற சிறு கிராமத்தில் இருந்த அவள் தந்தையின் விடுதிக்குச் சென்றார்கள். இவ்விடத்தில் அவருக்குச் சொந்தமான இரண்டு சிறு வயல்கள் இருந்தன. இவைகளின் விளைச்சல் விருத்தியாகிவந்த அவருடைய குடும்பத்தின் சவரட்சணைக்கு முதலாய் போதாததாயிருந்தது.

அசுன்தா என்பவள் தன் குடும்பத்தில் பிறந்த ஐந்து பிள்ளைகளில் மூத்தவள். அவள் தன் பெற்றோருக்கு சந்தோஷமாகவும் ஆறுதலாகவும், அவளுடைய சிறிய சகோதரர் சகோதரிகளுக்கு இரண்டாவது தாயாகவும் விளங்கினாள். அவளுக்கு ஆறு பிராயம் நடக்கும்போது கிராம பாடசாலைக்கு அனுப்பப்பட்டாள். அங்கு வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டாள். அவள் மகா தீக்ஷண்ணிய புத்திக் கூர்மையாலும் திட்ப நுட்ப சாமர்த்திய திறமையாலும் விளங்காவிடினும் அவளுடைய மதுர குணமும் சாந்தமுமான நடத்தையை முன்னிட்டு உபாத்தியாயர்களாலும் தோழர் தோழிகளாலும் நன்கு நேசிக்கப்பட்டாள். வீட்டின் வேலையில் தாய்க்கு உதவியாயிருக்க அவள் அதிகமாய் வேண்டப்பட்டதினால், அதிக காலம் பள்ளிக்கூடத்தில் படிக்க அவளுக்குச் சாத்தியப்படவில்லை. வீட்டில் அவள் அடக்க ஒடுக்க மேரை மரியாதையிலும், கீழ்ப்படிதலிலும், பெற்றோரின் மட்டில் வணக்கம் நிறைந்த பற்றுதல் நேசத்திலும் எல்லோருக்கும்மேல் வரிச்சட்டமாக விளங்கினாள். சிறு பிராயத்திலேயே அவளிடம் முக்கியமாய் துலங்கினது தேவ பக்தி. மிக்க பாலப் பருவத்திலேயே தினந்தோறும் கோவிலுக்குச் சென்று தேவநற்கருணை பேழையின் முன்னர் அநேக மணி நேரம் முழந்தாட்படியிட்டு வேண்டிக்கொள்வாள். தேவநற்கருணையிலிருக்கும் சேசுவை சந்திக்கிறதற்காக சாயரக்ஷைதோறும் கோவிலுக்குப்போவது அவளுக்கு ஆனந்தமாயிருக்கும். சாதாரணமாய் தன் சிறு தோழிகளை தன்னுடன் அழைத்துக் கொண்டு போவாள்.

அவள் மரித்தபின் அவளுடைய பங்கு சுவாமியார் அவளைப் பற்றி பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் பிற்பகல் நேரங்களில் கோவிலுக்கு யாரும் வழக்கமாய்ப் வராத வேளையில் சிறிய அசுன்தா தன் செபங்களையும் பக்தி முயற்சிகளையும் செய்ய வருவாள். அவைகளை முடித்தபின் சில நேரம் தங்கியிருந்து ஞான உபதேச வகுப்பிற்கு ஆஜராகி, மிக்க சிறு பிள்ளைகளுக்கு வேத காரியங்களைச் சொல்லிக்கொடுக்க உதவியாயிருப்பாள்." அக்காலத்திலேயே சேசுநாதர் தம்முடைய சிறு ஊழியக்காரியின் இருதயத்தை எவ்வித வரப்பிரசாதங்களால் நிறப்பினர் என்று சொல்ல யார் தரம்! ஆனல் ஒரு காரியம் நிட்சயமாய்ச் சொல்லலாம்: அவ்வரப்பிரசாதங்களை மரி அசுன்தா வீணாக்கவில்லை. அவைகளோடு ஒத்துழைத்தாள். பாலப் பிராயத்தின் மாதிரிகையான திவ்ய பாலனைப்போல், "சர்வேசுரனுக்கும் மனிதருக்கும் முன்பாக தேவ இஷ்டப்பிரசாதத்தில் வளர்ந்து வந்தாள்."

திவ்ய நன்மையில் சேசுநாதரோடு ஐக்கியமாகப் போகும் அந்நாள்தான் அவள் தன் அன்பான இருதயத்தின் சர்வ உருக்கப்பற்றுதல் அவாவுடன் தேடி எதிர்பார்த்துவந்த நாள்.

அவளுக்கு 12 பிராயம் நடக்கும்போது அவளுடைய கோரிக்கையும் நிறைவேறினது. செபிப்பதிலும், சந்தோஷ நன்றியறிதலால் ஏராளமான கண்ணீரைச் சிந்துவதிலுமே அசுன்தா அந்நாளைப் போக்கினள் என்று அவளுடைய தாயார் கூறுகிறாள்.

பிற்காலத்தில் புதுநன்மை வாங்க முஸ்திப்பு செய்துகொண்டிருந்த தனது இளைய சகோதரிக்கு அவள் எழுதினதாவது: "எனது மிகவும் பிரியமுள்ள சிறிய சகோதரியே, நீ புதுநன்மை வாங்கப் போகிறதைப்பற்றி நான் எவ்வளவோ சந்தோஷப்படுகிறேன். நீ அதைச் சரிவரச் செய்வதற்காக உனக்கு சேசுநாதர் வரப்பிரசாதமளிக்

கும்படி நான் அவரை மன்றாடுகிறேன். நான் புதுநன்மை வாங்கினபோது நமது குருவானவர் எனக்குச் சொன்னது எப்போதும் என் ஞாபகத்திலிருக்கின்றது.'' அதாவது:

'நீ புதுநன்மை சரியாய் வாங்குவாயானால், அந்நாளை நீ ஒருபோதும் மறக்கமாட்டாய். அதைப்போன்ற வேறே அநேக நாட்களைக் காண்பாய்' என்பதே. இவ்வார்த்தைகளுக்கு ஏற்றபடி அநேக அலங்கிர்த நாட்கள் எனக்குக் கிடைத்தன: மடத்தில் சேர நான் வரம் பெற்ற நாள், ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள், கன்னியர் உடை தரித்த நாள் வார்த்தைப்பாடு கொடுத்த நாள் ஆகிய இவைகளே.'' புதுநன்மை வரப்பிரசாதமானது அசுன்தா இனி சுமக்கவேண்டிய பாரமான கடமைகளில் அவளைத் திடப்படுத்த உதவியாயிருந்தது. அவர்களுடைய இரு வயல்களின் விளைவும், அவளுடைய தாயின் ஓயாத உழைப்பும் குடும்பத்தின் சவரக்ஷணைகளுக்குப் போதுமா யிருக்கவில்லை. அதினால் அசுன்தா கூலி வேலைசெய்ய வேண்டியதா யிருந்தது. அவளுடைய முகத்தில் தோன்றின வசீகரம் நாகரீக மேன்மைபெற்ற பிள்ளையெனக் காட்டுமே தவிர ஏழைக் குடியானவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவளாகக் காட்டவில்லை. நல்ல கத்தோலிக்கும் இரக்கமுமுள்ள அவ்வூர் தையற்காரன் ஒருவன் அசுன்தாவை தன்னுடன் இட்டுக்கொண்டுபோய், தன் தொழிலைக் கற்றுக்கொடுக்க ஒப்புக்கொண்டான். அவளும் அவன்பேரில் மெத்த பட்சம் காண்பித்தாள். அவன் சுற்றுக் கிராமங்களில் தன் வேலைசெய்யப் போகும்போதெல்லாம் அசுன்தாவை தன்னுடன் அழைத்துக்கொண்டு போவான்.

மாலை நேரம் அவர்கள் தங்கள் வீட்டுக்குத் திரும்பி வரும்போது ஜெபமாலை ஜெபித்துக் கொண்டு வருவார்கள். சில சமயங்களில் வழியில் பிரயாணிகளைக் கண்டால் தையற்காரன் பக்தியாய்ச் செய்துகொண்டுவரும் தன் ஜெபத்தை நிறுத்திவிட்டு அவர்களுடன் சற்று சம்பாஷிப்பான். ஆனால் அசுன்தா தன்னந்தனியே இருப்பவள்போல் அமரிக்கையுடன் ஜெபித்துக் கொண்டே இருப்பாள். தங்கள் ஊர்வந்து சேர்ந்ததும், தான் தூக்கிவந்த சுமையை அவன் வீட்டின் வாசலருகே வைத்துவிட்டு, தன்னில்லத்துக்கு போவதற்குமுன் தேவநற்கருணையைச் சந்திக்க தீவரப்படுவாள். அசுன்தா தன் தாயின் மட்டில் வைத்த உருக்கநேசத்துக்கு அளவில்லை. கஷ்ட உழைப்பில் சலியாமல், காலையிலும், மாலையிலும். தன் தொழிலைச்செய்வதிலும், வீட்டு வேலை பார்ப்பதிலும், பிள்ளைகளைப் பரிபாலிப்பதிலும், தன் பாலிய வயதையும்; இளம் பருவத்தையும் செலவழிப்பாள்.

15-பிராயத்திலேயே அவள் தன்பத்தின் கையில் வளர்ந்து தேறின ஓர் மனுஷியைப் போல் காணப்பட்டாள். ஆனால் அவளுடைய சுபாவ இலக்ஷணம் ஸ்திரப்பட்டதே யல்லாமல், கடினப்படவில்லை, கடைசிவரையில் பரிசுத்தமும் அன்புமுள்ள தன் குழந்தைப் பிராயத்தின் மாசற்றத்தனத்தையும், சாந்தத்தையும் காப்பாற்றிவந்தாள். சிறு வயதிலேயே அசுன்தா துறவற சீவியத்தில் சேசுவுக்குத் தன்னை ஒப்படைப்பதற்காகத் தேவ அழைப்பின் சப்தத்தைக் கேட்டாள் என்பதைப்பற்றி நாம் ஆச்சரியப்படலாமோ? ஆனால் அவளுடைய இருதயத்தின் ஆசை நிறைவேறுவது எங்ஙனம்! ஏனெனில் அவள் தன் பெற்றோரின் உயிருக் குயிரும் ஆறுதலுமாய், அவர்கள் தள்ளாப்பிராயத்தில் ஊன்றுகோலுமாய், அவளுடைய இளைய சகோதரர் சகோதரிகளுக்கு இரண்டாவது தாயுமாய் இருக்கவேண்டியதி னிமித்தம் இக்காரியம் சாத்தியமாகத் தோன்றவில்லை. குடும்ப பாரத்தொல்லைகளோடு போராடத் தனிமையாய்த் தன் தாயை விட்டுவிட்டுப்போக மனம் வராமல், தற்காலம் தன் வீட்டிலேயே தங்கியிருப்பது தன் முதற் பெருங்கடமை என்று சிந்திக்கலானாள்.

ஆயினும் தன் தாய்க்குத் தன் நம்பிக்கைகளை ஒப்புவித்தாள். அப்போதிலிருந்து அவள் சிந்தனை நோக்கம் ஆசைகளெல்லாம் மடத்திற்குப் போகிறதின்பேரிலேயே இருந்தன. அவளுடைய வாலிபப்பருவத்தின் தோழிகள் அக்காலத்தில் அவளுடைய சீவியம் பூலோகத்தையல்ல பரலோகத்தையே அதிகமாய் நாடியிருந்ததென்று ஒரு வாய்மொழியாய்க் கூறுகின்றார்கள்.

அவர்கள் வேலைசெய்ய ஒருங்கு சேரும்போது ஜெபமாலை சொல்வதிலும், பக்திக்கடுத்த புஸ்தகங்களை உரத்தச் சப்தமாய் வாசிப்பதிலும், சர்வேசுரனைப்பற்றியும் ஞானக் காரியங்களைப் பற்றியும் சம்பாஷிப்பதிலும் பழகிவந்தார்கள். ஏனென்றால் இதர காரியங்களைப்பற்றி பேசுவதென்றால் அசுன்தாவுக்குச் சலிப்பைத் தருவதாயிருந்தது. அசுன்தா காத்திருந்த இக்காலத்தில் ஜெபத்துக்கும் தபத்துக்கும் எவ்வளவு நேரம் மீதியாக்கக்கூடுமோ அவ்வளவு நேரம் அதற்காகச்

செலவழித்து துறவற சீவியத்துக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டுவந்தாள். தேவ அழைப்பின் பெரிய வரத்தை சர்வேசுரனிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக வாரந்தோறும், கொஞ்சம் அப்பமும் தண்ணீருமாத்திரம் அருந்தி ஒரு சந்தி பிடிப்பாள். மற்றத் தினங்களில் சுவையற்ற குழம்பை சேர்த்துக்கொள்வாள். இரவில் அடிக்கடி நெடுநேரம் ஜெபத்தியானத்தில் செலவழிப்பாள். தன் படுக்கையின்கீழ் கற்களையும் மரத் துண்டுகளையும் வைத்து சொற்பநேரம் நித்திரை செய்வாள்.

அவளுடைய சிற்றறையை அவளுடைய தாயார் பெருக்கும்போது அக் கற்களைக்கண்டு தன் குமாரத்திக்கு ஒரு வார்த்தையும் சொல்லாமல், அவைகளை எடுத்து எறிந்துவிடுவாள். ஆனால் அசுன்தா திரும்பவும் அவைகளைக் கொண்டு வந்து முன்போலவே வைத்துக்கொள்வாள்.

காலம் துரிதமாய்க் கடந்தது. அசுன்தா தன் அழைப்பைப்பற்றி தான் முதல் தீர்மானம் செய்தபோது எவ்வித நிலைமையில் இருந்தாளோ அதே நிலைமையிலேயே தனது 20-வது பிராயம் வரையிலும் தன் எண்ணம் நிறைவேறாது இருக்கக்கண்டாள். அதின் விஷயத்தில் அவளுக்கு வந்த தடைகளும் கஷ்டங்களும் வெல்லக்கூடாதவைகளைப்போ லிருந்தன. பட்டணத்துக்கு வெளியே கூலி வேலை செய்து ஜீவித்துவந்த ஓர் ஏழைப் பட்டிக்காட்டுப் பெண் தனக்கு அவசரமான சீதனம் சம்பாதிக்க யாதொரு வகையுமின்றி, ஓர் துறவற சபையில் ஏற்றுக்கொள்ளப்படுவது எவ்வாறு முடியும்? ஜெபத்திலும் தபத்திலும் தங்கள் சீவியத்தைச் செலவழித்து வெளிப்படக்கூடாமல் அடைபட்டிருக்கும் துறவறச் சபையில் தான் சேர்வதோ, அல்லது படிப்பிக்கும் வேலை, வியாதியஸ்தரை விசாரிக்கும் வேலை சரீரத்துக்கடுத்த பிறசிநேக பச்சாத்தாப வேலைகள் செய்ய ஏற்பட்ட சபைகளில் சேர்வதோ என்று சந்தேகத்துடன் தத்தளித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் சர்வேசுரன் திருச்சித்தத்தை யறிந்து அதை நிறைவேற்ற அவள் இடைவிடாமல் முயற்சியா யிருந்ததினிமித்தம், அவளுடைய தாழ்மையும் நிலைமையுமுள்ள ஜெபத்தின் பலனாக அவர் தாமே, அவள் இன்ன சபையில் சேரவேண்டுமென்றும், அதற்கு அநுகூலமான வழி வகைகள் இன்னவை யென்றும் காண்பிக்கச் சித்தமானார்.

லூயிஜி கானெஸ்திராரி (Luigi Canestrari) என்றழைக்கப்படும் மேற்றிராணியார் தன் விசாரணைக்குட்பட்ட போர்ஸ் (Force) என்னும் ஊரில் 1897-ம் வருஷத்தில் கோடைகாலத்தில் சொற்பகாலம் தங்கியிருந்தார்.

அசுன்தா தேவ பராமரிப்பின் மட்டில் வைத்த முழு நம்பிக்கையாலும் தன் சிநேகிதர்களாலும் தூண்டப்பட்டு, மேற்றிராணியாரைக் கண்டுபேச ஏற்ற சமயம் வாய்த்தபோது, அவரைக் கண்டு தன் விருப்பங்களையும், அவைகளை நிறைவேற்றுவதற்குத் தடையாயிருந்த இடையூறுகளையும்பற்றி யாதொரு கபடில்லாமல் அவரிடம் தெரிவிக்கலானாள். மேற்றிராணியார் அவள் சொன்னவைகளைப் பட்சமாய்ச் செவி கொடுத்து கேட்டார். ஆயினும் அவள் இன்னும் சற்று தாமதிக்கவும், அவள் புத்தியைத் தெளிவிக்க ஞான வெளிச்சம் உண்டாகவும், அவளை நடத்தி வருவதற்கு ஓர் வழிகாட்டி ஏற்படவும். அவள் ஜெபித்து வரவேண்டுமென்று அவளுக்கு அவர் ஆலோசனை தந்தார்.

ஆனால் இதுவரையிலும் அவள் எவ்வளவு காலம் காத்திருந்தாள்! எவ்வளவோ இடைவிடாமல் ஜெபித்தும் வந்தாள்! மேற்றிராணியார் கூறிய மொழிகளினால் தன்னழைப்பின் உண்மையைப்பற்றி அவர் ஏதோ சந்தேகப்படுகிறார் என்று நினைத்து; அசுன்தா தக்க சில பெரிய மனுஷாளைக்கொண்டு தனக்காக மறுபடியும் மேற்றிராணியாரிடத்தில் பரிந்து பேசும்படிச் செய்தாள்.

அதனால் மேற்றிராணியார் அவளைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கொண்டார். அவள் விசேஷ தேவ அருளால் நடத்தப்பட்ட புண்ணிய ஆத்துமம் என்று அவர் உணர்ந்து அவளுக்குத் தன்னாலியன்றமட்டும் உதவி புரியவும் மனங்கொண்டார். அசுன்தா அவரைத் திரும்பவும் கண்டு பேசினபோது, அவளுக்குச் சகாயம் பண்ணுவதாக வாக்கும் அளித்தார். மேற்றிராணியார் ரோமைக்குச் சென்ற கொஞ்ச காலத்துக்குள்ளாக மரியாயின் பிரான்சிஸ்கன் மிஷனரி கன்னியர்களின் சபையில் அசுன்தா ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். ஆனால் அவளை இன்னும் சோதிக்கக் கருத்துள்ளவராய் அவள் இன்னும் சற்று தாமதிக்க வேண்டுமென்றும், சீதனமில்லாமல் ஒரு சபையில் ஏற்றுக்கொள்ளப்படுவது சுலபமல்ல வென்றும், அவள் விஷயமாய் ஏற்படும் தடைகளைத் தம்மால் கூடியமட்டும் நீக்

கிவிட முயற்சிசெய்வோமென்றும் அவள் குடும்பத்துக்கு எழுதினர். அவர் எழுதியனுப்பிய இக்கடிதம் அசுன்தாவின் பொறுமையையும் நிலைமையையும் பரீக்ஷித்து பார்க்க ஏற்றதோர் அற்ப சோதனை என்று மேற்றிராணியார் எண்ணினர். ஆனால் அது அசுன்தாவுக்கு மெத்த பெரிய வாதனையாயிருந்தது. முதல் முதல் தோன்றிய கஷ்டங்களும் இடையூறுகளும் இன்னும் நீங்கவில்லையென்றும், அவைகளை ஒழிக்க மேற்றிராணியாரால் இன்னும் கூடவில்லையென்றும் நினைத்து சிந்தாகுலப்பட்டாள்.

தான் துறவற சபையில் சேராமல் தடுக்கப்படுவது சில வேளை சர்வேசுரனுடைய சித்தமாய் இருக்கலாம் என்றும் எண்ணினாள். "சேசு என்னை வேண்டாம் என்று தள்ளிவிடுகிறார். அவர் என்னைத் தள்ளிவிடுகிறார்" என்று மனங்கசிந்து கண்ணீர் விட்டழுது சொல்வாள். ஆனால் சில நாட்களுக்குப்பின் கார்மேகம்போல் அடர்ந்த இத்தடைகளும் இக்கட்டுகளும் ஒழிந்து, அவள் உள்ளத்தில் பிரகாசம் உதித்தது. மேற்றிராணியாரிடமிருந்து வந்த இரண்டாவது கடிதத்தில் அசுன்தாவைப்பற்றி எல்லா ஏற்பாடுகளும் அநுகூலமாய் முடிவாயினவென்றும், அவள் கூடிய சீக்கிரத்தில் ரோமைக்குப் புறப்பட்டுவந்து மடத்தில் பரீக்ஷையந்தஸ்தில் சேரவேண்டுமென்றும் கண்டிருந்தது. இதினால் அசுன்தாவுக்குண்டான சந்தோஷத்துக்கு அளவில்லை. செய்ய வேண்டிய சொற்ப முஸ்திப்புகளைச் செய்ததும் பிரயாணப்பட ஆயத்தமானாள். உயிருக்குயிராகிய அருமையான தங்கள் செல்வ மகளைச் சர்வேசுரனுடைய ஊழியத்துக்கு நேர்ந்து அவளைப் பூரண பலியாய் ஒப்புக்கொடுக்கும் தருணம் வந்துவிட்டதென்று அவளுடைய பெற்றோர் நினைக்கவே அவர்கள் மனம் புண்ணாய் நைந்து பதைத்துத் துடித்தது. எல்லாம் துரிதமாய் நிறைவேறிற்று.

தாயும் தந்தையும் அன்பும் தயையும் பொங்கும் இருதயத்தோடு மகளை மனங்கனியப்பார்த்து ஆசீர்வதித்து அவளை அனுப்பிவிட்டார்கள். அசுன்தா ரோமையை நோக்கிப் புறப்பட்டாள். எந்தக் காலத்திலும் இவ்வளவு தூரம் அவள் பிரயாணம் செய்ததில்லை. 1898-ம் வருஷம் மே மாதம் 6-ந் தேதி இந்த வாலிபப் பட்டிக்காட்டுப் பெண் ரோமையில் வந்து சேர்ந்தாள். கன்னியர் மடத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டாள். சில வருஷங்களுக்குள்ளாக இவ்வுத்தம பெண்மணி இச்சபையின் சிறந்த ஆபரணமாகவும் அதின் முக்கிய மகிமையாகவும் துலங்குவாளென்றும், அவள் பெயரைப் பூமியின் கடைசி எல்லையிலிருக்கும் இதர ஜனங்களும் அறிந்து அவள் சரித்திரத்தைத் தத்தம் பாஷையில் வாசித்து அவளைப் புகழ்ந்து ஸ்துதிப்பார்களென்றும் அப்போது எவரும் கனவிலும் நினைத்ததில்லை.

S. M.

(தொடரும்.)

GNANAMANI, III PART.

ஞானமணி 3-ம் பாகம்.

52-ம் அதிகாரம்.

உரோஜா மலரைக் கையால் தொட்ட மாத்திரத்தில் கிளி கீச் கீச் என்று கூவினது.

சலமோன் மரணமான ஐந்தாம் நாள் அபிராமி ஆஸ்பத்திரி நர்ஸின் வீட்டுக்குச் சென்று தன் கணவன் வியாதியாயிருந்த காலத்தில் அவள் அவருக்குப் புரிந்த உதவி ஒத்தாசைக்காக நன்றிகூறி சம்பாஷித்துக்கொண்டிருக்குங் காலத்தில், நர்ஸ் தன் பூர்வ விருத்தாந்தங்களை அபிராமிக்கு வெளியிட்டாள்.

அது யாதெனில்: தான் பிராமணப்பெண் என்றும், தன் பாலியப் பிராயத்திலேயே தன் பெற்றோர் இறந்தபடியால் தன் சிறிய தகப்பனால் தான் வளர்க்கப்பட்டாளென்றும் அறிவித்தாள். மேலும் தான் அவ்வூர் கன்னியருடைய பள்ளிக்கூடத்தில் கல்வி கற்கும்போது, தான் சத்தியவேதத்தில் சேர அபிலாஷை கொண்டிருப்பதை அறிந்த தன் சிறிய தகப்பனார் தன்னை அந்த ஸ்கூலினின்று நிறுத்திவிட்டதாகவும், அதற்குப்பின் அங்காங்கு தர்மம்பெற்று அன்னாட்டை விட்டு சிலோன் தேசத்துக்கு யாருக்குந் தெரியாமல் ஓடிவந்ததாகவும், அங்கு ஞானஸ்நானம் பெற்றுச் சத்தியவேதத்திற் சேர்ந்தபின், ஸ்வாமியாருடைய சிபாரிசின்மேல் அந்த ஆஸ்பத்திரியில் நர்ஸ் வேலையில் அமர்ந்ததாகவும் வெளிப்படுத்தினாள். இப்படித் தன் வரலாற்றை விவரித்தபின் தன் ஜன்ம ஊரான

விசாகபட்டணத்தின் செழுமைச் சிறப்பையும் அங்கு குருக்களும் கன்னியரும் சத்தியவேதத் துக்காகப் படும் பிரயாசை முயற்சிகளையும் விஸ் தாரமாய் விவரித்தாள்.

ஆகையால், விசாகப்பட்டணத்தின் சிறப்ப லங்காரத்தையும் அங்கு நடந்தேறிவருஞ் சங்கதி களையும் சுருக்கமாய் விவரித்து இந்தப் புஸ்த கத்தை முடிப்போம்.

விசாகப்பட்டண பெயருள்ள ஜில்லாவுக்கு அதே பெயருள்ள நகரம் முக்கிய பட்டணமா கும். விசாகப்பட்டண ஜில்லா மதிராசுக்கு வட கிழக்கிலுள்ளது. இப்பிராந்தியங்களில் தெலுங்கு பாஷை வழங்குகின்றது. இந்நகரில் உயரமும், பல அடுக்குமுள்ள சிறந்த கட்டிடங்கள் அனேகமுண்டு. நானாவித விசித்திர விநோதமான சாமான்கள் உள்ள ஷாப்புகளும், பட்டுப்பட்டா வளிகள் விற்குங் கடைகளும், பற்பல வருண முள்ள அழகான சீட்டிகளும், சொகுசான மஸ் லின்களும், நேர்த்தியான ரத்ன கம்பளங்களு முடைய ஜவுளிக்கடைகளும் எதேஷ்டமாய் இவ் வூரில் உண்டு.

மரத்திலுந் தந்தத்திலும் புஷ்பங்களையும், இலை மொக்குகளையும், மிருகம் பக்ஷிகளையும், மனிதரூபங்களையும் சிங்காரமாய்ச் செதுக்குவ தில் இப்பட்டணம் சிறந்தது. பித்தளை வெண் கலத்திலும் அதிசயமான வேலைப்பாடுகளுள்ள பாத்திர சாமான்களும் இவ்விடத்தில் செய்யப் பட்டுவருகின்றன.

தென்னாட்டைப்போன்ற தவச தானியங் களும், பலவிதமான நெல்வகைகளும், வெண்மை யான தானியங்களும் எதேஷ்டம். சமுத்திரம் போன்ற விஸ்தாரமான கரும்பு சோலைகளும் புகையிலை தோட்டங்களும் ஏராளமாய் இப் பிராந்தியங்களிலுண்டு.

விசாகப்பட்டணம் சமுத்திரக் கரைக்கு சமீ பித்திருப்பதால் இதைச் சௌக்கியத்துக்கு முக்கி யஸ்தானம் என்னலாம். இவ்விடத்தில் வேனிற் காலத்தில் உஷ்ணம் மிகவும் மட்டுள்ளதா யிருப் பதினாலும், சீதளகாலத்தில் குளிரு மிதமாயிருப் பதினாலும் உத்தியோகஸ்தரும் தனவந்தருமான ஐரோப்பியரும் இந்தியரும் சௌக்கியத்துக்காக கூட்டங் கூட்டமாய் வந்து சேருவார்கள் ஆரோக்கியகரமான இந்தச் செல்வ நகருக்கு. இதுகாரணமாக பெரிதும் சிறிதுமான அனேக பங்களாக்களும், கிரகங்களும், ஓட்டல்களும் அங்கு உண்டு.

தேவாராதனைக்குரிய ஸ்தலங்களுக்கும் குறைவில்லை. இந்தச்சிறந்த நகரில், இந்துக்களு டைய அனேக கோவில்களையும், உயர்ந்த கோபு ரங்களையும், சிறப்பான மண்டபங்களையும், பிர மாண்டமான சத்திரஞ் சாவடிகளையும், விஸ்தார மான தெப்பக்குளங்களையும், தோப்புகளையும், பூஞ்சோலைகளையும்பார்க்கலாம். வருஷாவருஷம் அனேக உற்சவங்கள் மகா வேடிக்கை வினோத மாய் நடத்தப்படும் இக்கோவில்களில். இத் திரு நாட்களைக் கண்டுகளிக்க கணக்கற்ற பிரஜை கள் இங்கு வந்து சேர்வார்கள். கிறீஸ்துவர்கள் என்னப்படும் பல வகுப்பாருடைய தேவாலயங் களும் அனேகமுண்டு. ஆனால் ரோமான் கத்தோ லிக்கு வகுப்பைச் சேர்ந்தவர்களுடைய தேவால யங்களே விசேஷித்தவைகள். ஏனெனில் அவை களுள் சில வெகு விசித்திர வினோதமாய்க் கட் டப்பட்டுள்ள அலங்காரமான கட்டிடங்கள். இக் கோவில்கள் வெளிப்புறத்தில் கொத்துவேலைப் பாடுகளால் சிறந்து துலங்குவதுடன் பிரமாண்ட மான மணிகள் தொங்கும் உயர்ந்த கோபுரங்களா லும் அலங்கரிக்கப்பட்டவை. உள்ளே சென்று பார்த்தாலோ உரைக்க நாவராது அதன் அலங் காரச் சிறப்பை. பெரிய திருவிழாக்களில் இப் பேர்ப்பட்ட தேவாலயங்களின் ஜோடிப்பை யும், ஆங்காங்கு தொங்கும் பட்டு ஜாலர்களின் அலங்காரத்தையும், பொற்குஞ்சங்களின் அழ கையும் வருணித் துரைப்பது அசாத்தியம். பீடத் தில் தகதகவென மின்னிப் பிரகாசிக்கும் பொன் வஸ்திராபரணங்களும், நாலா பக்கங்களிலும் அசைந்தாடும் பற்பல நிறமான கொடி பாவட் டாக்களும், கம கமவென மணக்கும் புஷ்பக் கொத்துகளும் புஷ்ப மாலைகளும், மேகம்போல் எழும்பும் சாம்பிராணிப் புகையும், வெள்ளித் தண்டுகளில் ஏற்றப்பட்டிருக்கும் பிரமாண்ட மான மெழுகுவர்த்திகளும், பளிச் பளிச்சென்று மின்னும் லஸ்தர் குளோபுகளும், ஆ! ஆ! எவ்வ ளவு மனக்களிப்பை உண்டாக்கும்! அப்பேர்ப் பட்ட நாட்களில் எந்த மதத்தைச் சேர்ந்தவனா னாலும், அங்கு சென்று கண்ணை யேறெடுத்துப் பார்ப்பானானால், அவனுக்கே தெரியாமல் ஒரு வித அதிசய பிரமை உண்டாகி அதைவிட்டு வெளியேற மனமுண்டாகாது.

மேலும் அந்தச் சபையைச் சேர்ந்த கிறீஸ்து வர்கள் அந்தப் பரிசுத்த ஸ்தலத்திற்குச் சென்று தேவனைத் தியானித்து ஸ்மரணை செய்யுங்கால், அவர்கள் அங்குமிங்கும் பாராமல் கடவுளில் தம்

மனதைச் செலுத்திச் செபித்து சேவை செய்வதைக் காணும் புறமதஸ்தோர் அதிசயங்கொள்வார்கள்.

இந்தச் சிறந்த பட்டணத்துக்கு அருகாமையில் ராஸ்மலை யென்னும் ஒரு குன்று உண்டு. இதிலும் முற்கூறப்பட்ட கத்தோலிக்கருடைய கோவில் ஒன்று இருக்கிறது. இது பொருத்தனைக்கோவில் என்று அழைக்கப்படும். தெய்வ பக்தரானோர் தாங்கள் நேர்ந்துகொண்ட பிரார்த்தனை, பொருத்தனை முதலியவைகளை இந்தப் பரிசுத்த ஸ்தலத்தில் அப்போதைக்கப்போது நிறைவேற்றிப்போவார்கள்.

இவ்விடத்தில் நடந்தேறிவரும் வருஷாந்தர உற்சவம் அதிக வைபவத்தோடும் ஆரவாரச் சிறப்போடும் நடைபெறும். அந்நாட்களில் கணக்கற்ற பிரஜைகள் தூர நாடுகளினின்று பிரயாணஞ்செய்து அவ்வூருக்கு வந்து சேருவார்கள். தாங்கள் கோரிய நன்மையைப்பெறவும், பெற்ற உபகாரத்துக்கு நன்றி செலுத்தவும் அந்தப் பரிசுத்த ஸ்தலத்துக்குப் போவார்கள். இது கத்தோலிக்கருடைய கோவிலாகவும் திருவிழாவாகவு மிருந்தும், சகல மதஸ்தரும் ஏராளமாய்ச் செல்லுவார்கள் அவ்விடத்துக்குத் தங்கள் பொருத்தனை காணிக்கையைச் சமர்ப்பிக்கும்படி.

அந்தத் திருவிழாவன்று கத்தோலிக்கு கிறிஸ்துவர்கள் ஒன்றுசேர்ந்து மலையிலிருக்கும் பொருத்தனை கோவிலுக்கு பவனி செல்லுஞ் சடங்கு மிகவும் மனோகரமாயிருக்கும். அது எவ்வாறெனில், குறிக்கப்பட்ட நேரம் சமீபிக்கவே, நேர்த்தியான உடுப்புகளை அணிந்த ஒரு பரிசாரகர் சிலுவைக் கொடியை மேலே உயர்த்திப் பிடித்து முன்செல்ல, இருபக்கத்திலும் மெழுகுவர்த்தி தண்டுகளைக் கையிலேந்தி நடப்பார்கள் வேறு இரு சிறுவர். தூபகலசங்களைக் கையில் பிடித்துக்கொண்டும், சாம்பிராணி பாத்திரங்களையும், மெழுகுவர்த்தி தண்டுகளையும், பல வர்ணக் கொடிகளையும் பிடித்துக்கொண்டு வரிசை வரிசையாய் நடப்பார்கள் அனேக சிறுவர்.

பல கல்விச்சாலைகளைச்சேர்ந்த சிறுவர்களும் சிறுமிகளும் பல வர்ணமான வஸ்திராபரணங்களை அணிந்துகொண்டு, தங்கள் தங்கள் கல்விச்சாலைகளின் கொடிகளுக்குப்பின், தங்கள் உபாத்திமார்களுடன் வரிசைவரிசையாய் ஒழுங்குடன் பின்தொடர்ந்து, கையில் மெழுகுவர்த்தி ஏந்திக்கொண்டும், அங்குமிங்கும் பாராமல் பக்தி விஸ்வாசத்துடன் செபித்துக்கொண்டும், தேவ கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டும் மெள்ள மெள்ள பவனிபோவார்கள்.

இவர்களுக்குப் பின் கன்னியரும் சன்னியாசிகளும் கரங்குவித்துப் பாடிக்கொண்டும், செபித்துக்கொண்டும் நடக்க, அவர்களுக்குப் பின் கையிற் செங்கோலேந்தி, சிரசில் மகுடந் தரித்து, பட்டுப் பட்டாவளிகளான பீதாம்பரங்களை யணிந்துகொண்டு பிரமாண்டமான குடைக்கொப்பான பாலியின் கீழ் திரு வஸ்திரங்களைத் தரித்த அநேக குருப்பிரசாதிகளால் புடைசூழ்ப்பட்டு மேற்றிராணியார் அவர்கள் பவனிசெல்லுவார்.

சமுத்திரம்போல் அங்கு சேர்ந்திருக்கும் விஸ்வாசிகள் இரு பக்கத்திலும் கூட்டங் கூட்டமாய்ச் சென்று செபப் பிரார்த்தனைகளைச் செபித்துக்கொண்டு நடப்பார்கள். இத்தனை ஆயிரம் பிரசைகள் சேர்ந்திருக்கும் கூட்டத்தில் யாதொரு பேச்சும் சந்தடியுமின்றி பக்தி கவனத்துடன் செபித்துக்கொண்டும், ஞானக் கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டும் இவர்கள் போவதைக் காணும் இதர மதஸ்தர் அதிசய பிரமைகொண்டு மவுனமாய் அவர்களைப் பின்தொடர்ந்து, மலையிலுள்ள திருஸ்தலத்தில் நடக்கும் செபம் பிரார்த்தனை முதலிய பரிசுத்த சடங்குகளை அதிசய பக்தியுடன் காண்பார்கள். அன்று திருயாத்திரை கோவிலில் ஒப்புக்கொடுக்கப்படும் விலையேறப்பெற்ற காணிக்கைகள் ஏராளமானவை. ஹிந்துக்களும் மகமதியருமான புறமதஸ்தருடைய காணிக்கைகளே அதிகமாயிருக்கும்.

இந்தச் சிறந்த நகரில் அனேக கல்விச்சாலைகளுண்டு. சர்க்கார் ஸ்கூல்களும், விஜயரங்க மகாராஜாவின் பாடசாலைகளும், இந்துக்களால் நடத்தப்படும் கல்விச்சாலைகளும், கிறீஸ்துவர்களான புரோட்டஸ்டாண்டாரால், கத்தோலிக்கரால் கற்பிக்கப்படும் வித்தியாசாலைகளும் ஏதேஷ்டமாயுண்டு. இவைகளில் படித்துவரும் மாணாக்கர் போட்டியுடன் கல்விப் பயிற்சிசெய்து பரீட்சையில் தேர்ந்து தங்கள் மாதாவாகிய வித்தியாசாலைக்கு கௌரவமும் கீர்த்தியும் உண்டாகும்படி பிரையாசப்பட்டு வருகிறார்கள்.

கத்தோலிக்கரால் நடத்தப்படும் அனேக கல்விச்சாலைகளில் கைத்தொழிற் பாடசாலையே மிகவுஞ் சிறந்தது. சித்திரம் எழுதுதல், கொத்துவேலை, தச்சுவேலை, கம்மாளவேலை, தட்டாரவேலை, நெசவுவேலை முதலியக் கைத்தொழில்கள் இவ்விடத்தில் கற்பிக்கப்பட்டு வருவதால்,

அனேக சிறுவர் இந்தக் கல்விச்சாலைக்குப்போய் மேற்படி வேலைகளில் இரண்டொரு வேலையைப் பயின்று வருகிறார்கள்.

இந்த ஸ்கூலில் செய்யப்படும் சாமான்கள் முதல்தரமும், சுத்தமானவைகளும், கெட்டியானவைகளுமா யிருப்பதால் இராஜாக்கள், ஜமீன்தார்கள் முதலிய பிரபுக்கள் தங்களுக்கு வேண்டிய சாமான்களுக்கு அடிக்கடி இவ்விடத்துக்கு ஆர்டர் அனுப்புவார்கள்.

இந்த விசாகப்பட்டண மேற்றிராசன விசாரணையில் உழைத்துவருங் குருக்கள், சன்னியாசிகள், கன்னியர் முதலிய தேவ ஊழியரின் மேலான புண்ணியத்தையும், மனித இரக்ஷணியத்துக்காக அவர்கள் படுங் கஷ்ட பிரையாசையையுங் கண்டு வரும் பிரஜைகள் அனைவோரும் அதிசயித்து, அவர்களை மதித்து, அவர்களால் நடத்தப்படும் கல்விச்சாலைகளுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பிவைக்கிறார்கள். உயர்ந்த ஜாதியரான பிராம்மணப்பெண்களும் மகராஷ்டப்பெண்களும் அநேகமாய்க் கன்னியரால் நடத்தப்படும் ஸ்கூல்களில் படித்துவருகிறார்கள்.

விஜயநகரத்து மகாராஜா அவர்களும் விசாகப்பட்டணத்தின் கத்தோலிக்கு மிஷன் மட்டில் அதிக அன்பும் அபிமானமுங்கொண்டு, தமது இராஜ நகரில் மேல்குலத்தோருக்காக ஒரு கல்விச்சாலை வைக்கும்படி கேட்டுக்கொண்டதின் மேல் கன்னியர் இந்த நகரில் பெரியதோர் வித்தியாசாலையைக் கட்டி, அதில் இருநூற்றுக்கு அதிகமான பிராமணப்பெண்களுக்கும் ரஜபுத்திரப் பெண்களுக்கும் கல்வி பயிற்றிவருகிறார்கள்.

மகாராஜா அவர்களும் பரோபகார குணமுடையவராகையால், அந்த மிஷனுக்கும் கல்விச்சாலைக்கும் அப்போதைக்கப்போது பொருளுதவி செய்துவருகிறார்.

மகாராஜா அவர்கள் விசாகப்பட்டணத்துக்குப் போகும்போதெல்லாம் கத்தோலிக் கல்விச்சாலைகளில் ஒன்றிரண்டை யென்கிலும் சந்தியாமற் போகார். ஆனதுகொண்டு அவர் அங்கு போகுஞ் சில தினங்களுக்கு முன் தமது வருகையைப்பற்றி ஸ்கூல் மானேஜர் ஸ்வாமியாருக்குத் தெரியப்படுத்துவார். அப்போது அவருக்கு நல்வரவு கொடுக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

நாம் குறித்துப் பேசுங்காலத்தில் மகாராஜா விசாகப்பட்டணத்துக்குப் போயிருந்தபோது, அவர் முன்னதாகச்செய்த ஏற்பாட்டுப் பிரகாரம் கத்தோலிக் கல்விச்சாலைக்கு ஏகினர். அவர் அந்த பிரமாண்டமான ஸ்கூலின் வாசற்படிபோய்ச் சேரவே, அந்த ஸ்கூல் பாண்ட்வாத்தியம் முழங்கினது. ஸ்கூல் மானேஜராகிய ஸ்வாமியாரும் மற்ற உபாத்திமாரும் தங்கள் கல்விச்சாலையைச் சந்திக்கவந்த இராஜ பிரபுவுக்கு யோக்கியமான மரியாதை உபசார மெல்லாங் காட்டினர்.

மகாராஜா அவர்கள் ஒவ்வொரு வகுப்புக்கும்போய் சற்று நேரமிருந்து உபாத்திமாருடைய வினாக்களுக்கு மாணாக்கர் பகரும் மறுமொழிகளைக் கேட்டபின், அவர்களுக்குச் சிற்சில வார்த்தைகளால் புத்திமதி சொல்லி கைத்தொழிற் கற்பிக்கப்படும் சாலைக்குச் சென்றார்.

கைத்தொழிற் கற்பிக்கப்படும் சாலையில் Brothers பிரதர்ஸ் என்று அழைக்கப்படும் குருப்பட்டம் பெறாத பிரதர் தேனிஸ், பிரதர் லியோ, பிரதர் காஸ்மீர், பிரதர் சிறில் என்னும் நான்கு சன்னியாசிமார்கள் அனேக தொழில் உபாத்திமார்களோடு 590 பேருக்கு அதிகமான சிறுவர்களுக்குக் கைத்தொழிற் கற்பித்துவந்தார்கள்.

மகாராஜாவானவர் கைத்தொழிற்சாலையில் பிரவேசித்த உடனே முதல் முதல் அச்சுக்கூடத்துக்குப்போய் அங்கு அனேக சிறுவர் அந்த வேலையை மகாத் திறமை சாமர்த்தியத்துடன் அப்பியாசிப்பதைக் கண்டு சந்தோஷித்தார். அதன்பின் நெசவு வேலை, தச்சு வேலை, கருமார் வேலை, தட்டார் வேலை நடத்தப்படும் ஒவ்வொரு சாலைக்கும் சென்று, ஆங்காங்கு சிறுவரால் செய்யப்படும் நானாவிதமான வேலைப்பாடுகளைக்கண்டு சந்தோஷித்து, அவைகளுக்குக் கண்காணிகளாய் நின்று போதிக்கும் பிரதர்மாரைப் புகழ்ந்து மெய்த்துக்கொண்டார். மேலும் ஒவ்வொரு சாலையிலு மிருந்து தமக்குச் சில சாமான்களைச் செய்து அனுப்பும்படி ஆர்டர் கொடுத்தார்.

இதற்குப்பின் வெகு விசித்திர விநோதமாயும் சூக்ஷ நுட்பமாயும்செய்யப்படும் தந்த வேலைப்பாடுகளைக் கண்டு அதிசயித்தபின், சித்திரப்படங்கள் எழுதப்பட்டு, மரத்திலும் சலவைக் கல்லிலும் உருவங்கள் செதுக்கப்படும் பெரிய சாலைக்குள் சென்றார் மகாராஜா அவர்கள்.

அந்த வித்தையில் தேர்ந்த பண்டிதரான பிரதர் லியோ என்பவருடன் கைகுலுக்கி, சில நேரம் அவருடன் பேசியபின், எண்ணை வர்ணத்தாலும் தண்ணீர் வர்ணத்தாலும் பிள்ளைகளால் சித்திரிக்கப்பட்டு அந்த பிரமாண்டமான மண்ட

பத்தின் சுவர்களில் தொங்கும் அனேக படங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

படங்களையுஞ் சுரூபங்களையும் பார்த்து மகிழ்ந்தபின், மண்டபத்தின், மத்தியில் சிவப்புப் பட்டால் மூடப்பட்டிருந்த படத்தை மகாராஜா பார்த்து, "இது என்ன படம்?" என்று பிரதர் லியோவை வினவினர். அதற்கு அவர், "அந்தப் படத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் பஞ்சவர்ணக்கிளி தன் வாயில் கௌவிக்கொண்டிருக்கும் உரோஜாமலரைத் தாங்கள் கையால் எடுத்தமாத்திரத்தில் அது இன்னபடமென்று அறிந்துகொள்வீர்கள்" என்றார்.

அப்போது மகாராஜா சிரித்துக்கொண்டு, "என்ன பிரதர், உங்களுக்கு ஜாலவித்தைகூட தெரியுமோ?" என்று தமாஷாய்ச் சொல்லிக்கொண்டே கிளியின் வாயிலுள்ள உரோஜாமலரைக் கையால் தொட்டு எடுத்த க்ஷணமே, கிளி 'கீச், கீச்' என்று கத்திற்று. கிளி கூவினமாத்திரத்தில் படத்தின்மேல் போடப்பட்டிருந்த சிவப்புப்பட்டுத் தானாகக் கீழே விழவே, மகாராஜாவும் மற்றவர்களும் அந்தப் படத்தைப் பார்த்தார்கள். கிளி கூவினமாத்திரத்தில் பக்கத்து அறையில் தயாராயிருந்த 20 சிறுவர், அங்கு முழங்கும் கிளாரிநெட், பாஞ்சோ, பிடில், பியானு முதலிய வாத்தியங்களுடன் "இதோ நமது மகாராஜா" என்னும் ஒரு புதிய பாடலை இனிய தொனியுடன் பாட ஆரம்பித்தார்கள்.

இவ்வரிய காக்ஷியையெல்லாம் கண்டுகளித்த மகாராஜா அவர்கள் அதிசய பிரமைகொண்டவராய், வாத்தியம் முடிவாகும்பரியந்தம் படத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தார். பாடல் முடிவாகவே, தமது அருகாமையில் நின்றுகொண்டிருந்த மேற்றிராசன சிரேஷ்ட ஸ்வாமியார், ஸ்கூல் ஸ்வாமியார் முதலியவர்கள் பக்கமாய் மகாராஜா திரும்பி, "இது என்னுடைய் சரியான சாயலுள்ள படம்" என்றார். அப்போது பிரதர் லியோ 16 பிராயமுள்ள ரயிட்சிங் என்னும் ஒரு ரஜபுத்திர வாலனைக் காட்டி, "இவன்தான் இதைச்சித்திரித்தவன்" என்றார். இதைக்கேட்டு மகாராஜா சந்தோஷித்து சிறுவனுடையகையைப் பிடித்துக் குலுக்கி, "நீயும் ஒருநாள் பிரதர் லியோவைப்போல, சிறந்த சித்திரக்காரனவா" யென்று சொன்னபின், பிரதர் லியோ பக்கமாகத் திரும்பி, "உமது கை யிந்தப் படத்தில் பட்டிராவிட்டால் இவ்வளவு நேர்த்தியாயிரா" தென்று பிரதரையும் புகழ்ந்து, இதுபோன்ற ஒரு படம் சித்திரித்து தமக்கு அனுப்பும்படி உத்தரவு கொடுத்தார்.

இது முடிந்து, மகாராஜா அவர்கள் சிரேஷ்டர், ஸ்கூல் மானேஜர், பிரதர்மார் முதலியவர்களால் சூழப்பட்டுநிற்கும் சமயத்தில், "நான் இந்த கல்விச்சாலைக்கு வரும்போதெல்லாம் சந்தோஷ திருப்தியுடன் இதைவிட்டுப் புறப்படுவதுண்டு. ஆனால் இன்றுதினம் நான் கண்டதும் கேட்டதுமானவைகளால் என் சந்தோஷமும் பிரமிப்பும் பத்துமடங்கு அதிகமாயிற்" றென்று, சொல்லி வெளியேறவே, 600 பேருக்கு அதிகமான மாணாக்கர், அணிவகுக்கப்பட்டு கவாத்துசெய்யும் பட்டாளம்போல் வரிசை வரிசையாய் நின்றார்கள்.

மகாராஜா அவர்கள், ஸ்வாமிமாரோடும் பிரதர்மாரோடுங் கைகுலுக்கி தமது குதிரை இரதத்தில் ஏறவே, அத்தனை பிள்ளைகளும் ஒரே வாக்காய் சலூட் செய்தார்கள். இதற்குள் ஸ்கூல் பாண்ட்வாத்தியம் முழங்க, மகாராஜாவுக்கு மூன்று சீயர்ஸ் என்று ஸ்கூல் மானேஜர் கூறவே, பிள்ளைகளும் அவ்வாறே செய்து முடித்தார்கள். இதைக் கேட்ட மகாராஜா இரதச் சவாரிசெய்து கொண்டே சகலருக்கும் பெரிய சலாம் போட்டார்.

மகாராஜா அவர்கள் கொடுத்த ஆர்டர்படி சகல சாமான்களும் செய்து சித்தப்படுத்தப்பட்டு மூன்றும் மாதம் அவை இராஜ அரண்மனைக்கு அனுப்பப்பட்டன. அவைகளின் கிரயமாக 3,000 ரூபாயும், அதனுடன் நன்கொடையாக வேறு பணத்தொகையும் மானேஜர் ஸ்வாமியாருக்கு மகாராஜாவால் அனுப்பப்பட்டது.

THE EFFICACY OF HEARING MASS.

பூசை காண்பதின் பலன்.

காலங் கோடைகாலம். மணி மத்தியானம் 12 ஆய்விட்டது. வெயில் உக்கிரமமாய் உறைக்கின்றது. துரைசாமி ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்தான். சாப்பாடு இன்னும் தயாராகவில்லை. அவனது மனைவி அடுப்பண்டையிலிருக்கிறாள். வியர்வை உடலெல்லாமவளுக்கு ஆறுபோல் பெருகுகின்றது. ஆபி

னும் நெருப்பை மூட்டி போஜனம் முஸ்திப்புச் செய்வதிலேயே கருத்தா யிருக்கின்றனள். கண்டான் துரைசாமி மனைவியை. கொண்டான் கவலை. "நம்பிக்கை, நீ எவ்வளவு கஷ்டப்படுகிறாய் இங்கே! ஒரு வேலையாள் வைக்கவும் நமக்கு வழியில்லை. உன் தாய்வீட்டில் இவ்வளவு கஷ்டப்பட்டாயா? என்ன செய்கிறது. எனக்கு வாழ்க்கைப்பட்ட நாள்முதல் உனக்குத் துன்பந்தான்" என்று இன்னு மதிகம் பேசுவதற்குள் தன் வேலையைப் பார்த்துக் கொண்டே "உங்களுக்கு எப்போதும் ஒப்பாரிதான். நீங்கள் என்னிமித்தம் எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள்! அதில் பத்தில் ஒருபங்கு மூதலா யில்லையே என தல்லல்" என நவின்றாள் நம்பிக்கை. "இந்த மூன்று வருஷகாலமாய்ச் சம்பளத்தை யுயர்த்த வேண்டுமென்று ஆபீஸ் மானேஜரிடங் கேட்டு வருகிறேன். அவன் மனது கல்லாயிருக்கிறது. ரூ 10 போதுமென்பது அவனது நோக்கம் இன்றைக்குக்கூடக் கேட்டேன், ஒன்றும் பலிக்கவில்லை" என முறையிட்டான் அகமுடையான். "வீணாய் அங்கலாய்ப்பதில் பலனென்ன? துன்பத்தில் பொறுமையா யிருப்பதுதான் நலம். பொறுத்தார் பூமியாள்வார். பின்னும் கஷ்டத்தில் பிறர்மேல் முறையிடுவதில் என்ன லாபம்? வேண்டும் வேண்டாமென்றாலும் நாம்தா மனுபவிக்கவேண்டும். 'அழுதழுதும் பிள்ளை யவள்தானே பெறவேண்டும்' என உரைத்தாள் அன்னை தயையும், அடியாள் பணியும், பொன்னின் அழகும், புவியின் பொறையும் இன்னு மிவைபோன்ற நற்குணங்கள் பலவும் ஒருங்கே யமையப் பெற்ற பதிவிரதை. "நீதான் ஔவை போல் பேசுவாயே" எனப் புன்னகையோடு புகன்றான் துரைசாமி.

இவன் ஆபீஸில் உண்மையாகவும் ஊக்கமாயும் உழைத்துவந்தபோதிலும் சம்பளம் உயர்த்தப்படவில்லை. இது கஸ்தியை உண்டாக்கினது. இதை யவனிப்போது அதிகமாய்ப் பாராட்டவில்லை. ஆனால் மானேஜர் "உனக்குப் பிரியமில்லாதேபோனால் வேறு வேலை பார்த்துக்கொள்" என்று சொன்ன வார்த்தைகள் அவன் மனதை ஈட்டிபோல் குத்தின. அவனது மனைவியும் நல்லகாலம் பிறக்குமென்றே காத்திருந்தாள். வேலைக்கோர் ஆள் அமர்த்த வேண்டுமென்றும், வீட்டிற்கு இன்னுந் தேவையான தட்டுமுட்டு சாமான்கள் வாங்கவேண்டு மென்றும் யோசனை பண்ணியிருந்தாள். ஆனால் இப்போது இலவுகாத்த கிளிபோலானாள். துரைசாமி சாப்பிட்டுவிட்டு வேலைக்குப் போய்விட்டனன்.

மாலையில் திரும்பினதும் மனைவியோடு சாவகாசமாய்ப்பேசிக்கொண்டிருக்கையில் ஆபீஸ் மானேஜர் செய்த கொடுமையைப் பற்றி புலம்பத் தலைப்பட்டான். நம்பிக்கை அதை நிறுத்தி "போனது போகட்டும், அதை மறந்துபோவோம். நாம் ஒரு காரியஞ் செய்தால் நலமாயிருக்கும்" என்றாள்.

"என்ன செய்யவேண்டு?" மென ஆத்திரத்துடன் வினவினன் கணவன். "நான் தினந்தோறும் பூசைக்குப் போய் வருகிறது உங்களுக்குத் தெரியும். தவசுகாலந் துவக்கிவிட்டது. இந்த காலத்திலாகிலும் ஏன் நீங்களுங் கோவிலுக்குப் போகக்கூடாது? அதின் பலனாக கடவுள் நமக்கு நன்மை செய்வார்" எனப் பகர்ந்தாள் பத்தினி. சற்றே யாலோசித்து "அது சரிவராது. எட்டு மணிக்கெல்லாம் ஆபீஸுக்குப் போகவேண்டும். கோவிலுக்குப்போனால் தாமதமாகிவிடும்" என்றான் பத்தா. "6½-மணிப் பூசைக்குப் போய்வந்தால், சாப்பிட்டுவிட்டுப்போக வேண்டிய நேரமிருக்கிறதே" என்றாள் நம்பிக்கை. மறுத்துச்சொல்ல வழியின்றி "தினந்தோறும் பூசைக்குப் போகிறது அவசரமா? மற்ற ஆண்பிள்ளைகளெல்லாம் போகவா செய்கிறார்கள்" என வேறு சாக்குபோக்கு சொன்னான். "மற்றவர்கள் எப்படியும் போகிறார்கள். நம்முடைய கஷ்டம் நமக்கல்லவா தெரியும்? நமக்கு வேண்டிய நன்மையை நாமல்லவா பிரந்து மன்றாடவேண்டும்? நாம் தினந்தோறும் பூசைக்குப்போய் உங்களுக்கு வேண்டியதை நான் கேட்கிறேன். எனக்கு வேண்டியதை நீங்கள் கேளுங்கள்" என்று சாதுரியமாய்ச் செப்பினாள். "சரி, அப்படியானால் நாளை முதல் போகலாம்" எனச் சம்மதஞ் சொன்னான். முன் வைத்த காலை பின் வைக்கவில்லை. துவக்கத்தில் துரைசாமிக்குக் கடினமாயிருந்தது. நாள் போகப்போக சுளுவாயிற்று. வேலைக்குப் போவதிலுஞ் சுணக்கமில்லை.

தபசுகாலங் குறுகிவருகிறது. பரிசுத்தவாரமுங் கிட்டிற்று. ஒரு நாள் துரைசாமி ஆபீஸிலிருக்கும்போது. 'பியோன்' வந்து "மானேஜர் உம்மைக் கூப்பிடுகிறார்" என்றான். இதைக்கேட்டதுந் திகில்கொண்டான். ஏதாகிலும் வேலையில் பிசகு செய்துவிட்டோமோ வென பயந்தான். அச்சத்தோடேயே போனான். மானேஜரைக் கண்டான். "துரைசாமி! நீ சில நாட்களுக்குமுன் உன் சம்பளத்தை யுயர்த்தவேண்டுமென்று கேட்டாயல்லவா? நீ இந்த வேலையிலிருக்குமட்டும் அது சாத்தியப்படாது" என்றுரைத்தார் மானேஜர். இதைக்கேட்டதும் ஆயாசப்பட்டான். "ஆனால் வேறு வேலை யொன்றிருக்கிறது. அதைப் பார்ப்பாயாகில் மாதம் ரூ 30 சம்பளமாகும்" எனத் தொடர்ந்துரைத்தார். தன்னையே நம்பாது பிரமித்து நின்றான் துரைசாமி. "நீ இனிமேல் எனக்கு 'செக்ரடரி' யாக விருப்பாய். எப்போதும் உண்மையாகவே நீ யுழைத்துவந்தாய். பின்னும், தெய்வபயமுள்ளவன், வேத கடமைகளை சமுத்திரையா யநுசரிப்பவன்பேரில் எனக்கு முழு நம்பிக்கை. நான் உன்னைத் தினந்தோறும் பூசையில் பார்க்கிறேன். ஆகையால் நீ வேலையில் திருப்தியளிப்பாய் என்பது எனக்குள்ள நம்பிக்கை" என விளம்பிவிட்டு வேலையின் முறைகளைச் சொல்லி முடித்தார்.

* * * * *

"நம்பிக்கை ஓர் நல்ல சேதி கொண்டுவந்திருக்கின்றேன்; என்னவென்று சொல் பார்ப்போம்" என மலர்ந்த முகத்தோடும் புன்னகையோடுஞ் சந்தோஷமாய் வினவினான் துரைசாமி. அவள் அதிசயித்துச் சற்றே மவுனமாய் நின்றபின் "எனக்கென்ன தெரியும்? நீங்கள்தான் சொல்லுங்களேன்" என்றாள். "நீ சொல்லமாட்டாயென்று எனக்குத்தான் தெரியுமே. நாம் பூசைக்குப்போய் வந்ததின் பலன் கிடைத்துவிட்டது. தினந்தோறும் உனக்காக என் சம்பளம் உயரவேண்டுமென்று கேட்டுவந்தேன். கடவுள் கருணைபுரிந்தார். இனிமேல் மாதம் ரூ 30 கிடைக்கப்போகிறது" என உரைத்தபின் ஆபீஸில் நடந்ததை சவிஸ்தாரமாய்ச் செப்பினான். "ஆ! கடவுள் இவ்வளவு சீக்கிரம் நமது ஏழை மன்றாட்டைக் கேட்பாரென்று நான் நினைக்கவேயில்லை. நான் உங்கள் கவலையை யாற்ற, சம்பள முயரவேண்டுமென்றே அநுதினமும் மன்றாடினேன். அருள் புரிந்தார். அவர் செய்யு மற்புதமே அற்புதம். அவருடைய தாசர்களை ஒருபோது மறக்கமாட்டாரென்பதற்கு இதுவோர் நல்ல அத்தாக்ஷி. அவருக்கு அநவரத காலமும் ஸ்தோத்திரம்" எனக் கனிந்த யிருதயத்தோடு மொழிந்தாள். "எல்லாம் உன்னால்தான்" என்றான் துரைசாமி. "திவ்ய பூசையின் பலனல்லாது வேறல்ல. நாம் பூசைக்குப் போனதால் லாபமா, அல்லது நஷ்டமா? இம்மையில் இவ்வளவு சம்பாவனையானால் மறுமையில் எப்படி? சரீரத்திற்கு வேண்டிய நன்மை கிடைத்தது தெரிகிறது. ஆனால் ஆத்துமத்திற்கு வேண்டிய நன்மை எவ்வளவு கிடைத்திருக்கும்? யார் சொல்வர்? ஆகையால் இனிமேல் நாள் தவறாது பூசைக்குப் போவோமா?" என்று வற்புறுத்திக் கேட்க "சந்தேகமின்றி" என மனப்பூர்வமாய் விடைபகர்ந்தான் துரைசாமி.

M. S. M.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்]

வேம்பார் அமலோற்பவ ஜுபிலி கிளப்பும் அதன் முன்னேற்றக் குறைவும்.

உலகின் கண் சகலத்தையும் முன்னுக்கு கொண்டுவரச் சபைகளே தகுந்த ஆயுதமெனச் சொல்லப்படுகிறது.

இவ்வபிப்பிராயம் உண்மை யென நாமே நமது ஜீவியகாலத்தில் கண்டுங் கேட்டுமிருக்கிறோம். சபைகளில்லாத ஜன சமுகமும், தலைவனில்லாத சபைகளும் முன்னேற்றமடைந்தது எக்காலத்துமில்லை. இஃதை யுத்தேசித்தே, 1904-ம் ஆண்டு நம் வேம்பாற்று ஜனசமுக முன்னேற்றத்திற்காக எல்லாம் வல்ல தேவதாயை முன்னிட்டு, அமலோற்பவ ஜுபிலி கிளப் என்னும் நாமதேயத்தோடு ஓர் சபையை நம் பெரியவர்கள் ஏற்படுத்தினார்கள். இச்சபை சுமார் பன்னிரண்டு ஆண்டுவரையில் நன்கு நிறைவே

றினதை நாமறிவோம். அப்பால் அது ஒற்றுமைக் குறைவால் கவனியாது விடப்பட்டது. சபை கவனியாது விடப்பட்டாலும், தேவதாயினுடைய நாமதேயத்தையுடைய இச்சபையின் அஸ்திவாரம் கெட்டுப்போகவில்லை. நமது முன்னேற்றம் நமது வசமின்றிப் பிறர்வசமென நினைத்தல் பெரிய மதிகேடாகும். இவ்வாறு நினைப்பவர்கள் பழுக்கும் பழுக்கும் எனக் காத்திருந்து ஏமாந்து பறந்துபோகும் இலவுகாத்த கிளிக்கே ஒப்பாவார்கள். கன்னியாகுமரி முதல் காவேரி வரையுமுள்ள நம் குலத்தவர்க்குள் நம்முடைய முன்னேற்றத்தை யொட்டி "நவீனகிளர்ச்சி" யுண்டாயிருக்கும் இக்காலத்தில், நாம் மட்டும் விழிக்காது நித்திரைசெய்வ தென்னே!! துண்டு துண்டாய்ப் பிரிந்து கிடந்த நம் தாய் நகராகிய திருமந்திர நகரும் ஒன்றுபட்டு ஒற்றுமையோடிருக்க, நாம் என் பிரிவுபட்டு வாணாளை வீணாளாக்குகின்றோம்? "பாவம்" உழக்கிலும் கிழக்கு மேற்கா? ஒருசாண் ஊரில் ஒன்பது கட்சியா? நீவிர் என்னாளும் உச்சாரணஞ் செய்யும் பரமண்டல மந்திரத்தின் கருத்தறிந்து, பக்தியுடன் சொல்வீராகில், இவ்விதக் கட்சிகள் உங்களிடத்தில் வருமா? எல்லாமிருக்கட்டும், போனதுபோகட்டும். இனியாகிலும் நம் ஜாதி முன்னேற்றத்தைக் கருதி, நம் சிற்றூரில் சர்வேசுரனின் திவ்ய ஆசீர்வாதம் உண்டாக நமது அமலோற்பவத் தாயின் ஜுபிலி சபை நன்கு நடத்த முன் வருவீர்களெனப் பெரியோர்களைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,
பரோபகார பரதன்.

காட்பாடியில் திருச்சபையின் பரிபாலகரான அர்ச். சூசையப்பர் மஹோற்சவம்.

இத்திருநாள் கொண்டாட்டத்தின் நவநாள் ஏப்பிரல் மீ 8 உ துவக்கிற்று. திருநாள் 17 உ புதன்கிழமை மிக்க ஆரவாரச்சிறப்பாய் முடிவு பெற்றது. புதன்கிழமை காலை 7½ மணிக்கு, அரக்கோணம் பங்கு சுவாமியார் ராஜரிஷி ஜோசப்நாதரும், எமது பங்கு சுவாமியார் சங். ராஜநாதரும் டீக்கன்-சப்டீக்கன்களா யிருக்க, சங்கைக்குரிய வேலூர் பங்கு சுவாமியாரால் பெரிய பாடல் பூசை நடந்தது. அன்று சாயந்திரம் 6-45 மணிக்கு அர்ச். சூசையப்பரின் வல்லமையையும் மகிமையையும் பற்றி சங். ஜோசப்நாதரால் மிக்க இனிமையாய் ஓர் பிரசங்கம் செய்யப்பட்டது. 7½-மணிக்கு பாணம், தீவட்டி, மத்தாப்பு அலங்காரவைபவத்துடன் சப்பர சுற்றுப்பிரகாரமும் அதன்பின் தேவநற்கருணை ஆசீர்வாதமும் நடந்தேறியது. இம் மஹோற்சவக் கொண்டாட்டம் இந்த காட்பாடியில் இதுவே முதல் தடவையாகும். வேலூர் போலீஸ் பாண்டு வாத்தியம் வந்து அன்று முழுதும் சேவித்தது.

இந்தத் திருநாளுக்கு உதவிசெய்த சகலருக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும் அர்ச். சூசையப்பருடைய வல்லமை பொருந்திய மன்றாட்டால் தேவ ஆசீர்வாதம் உண்டாவதாகவும். முக்கியமாய், காட்பாடி ரயில்வே ஹெட் டிக்கட் கலக்ட்டர் டிசில்வா துரை மிக்க சிரமப்பட்டு உழைத்தார். ஸ்ரீமான் ஞானப்பிரகாசம் பிள்ளை மிக்க தாராள குணத்துடன் நிதிதந்து உதவி புரியலானர்.

காட்பாடி,
21—4—1918. A. M. SUSAI.

புதுக்கோட்டையில் நடந்த பாஸ்குத் திருவிழா.

புதுக்கோட்டையிலுள்ள பரிசுத்ததிரு இருதயங்களின் தேவாலயத்தில் மற்ற வருஷங்களை விட இவ்வருஷம் பாஸ்குத்திருவிழா வெகு சிறப்பாயும் ஆடம்பரமாயும் கொண்டாடப்பட்டது. மார்ச்மீ 28உ பெரிய வியாழக்கிழமை யன்று திவ்விய பூசை முடிந்ததும், மிக்க அலங்காரமாய் ஜோடினை செய்யப்பட்டிருந்த பீடத்தில் திவ்விய நற்கருணை ஸ்தாபிக்கப்பெற்று, அன்று முழுவதும் கிறீஸ்துவர்களால் ஆராதிக்கப்பட்டுவந்தது.

அடுத்தநாளாகிய பெரிய வெள்ளிக்கிழமை காலை திருச்சிலுவை முத்தமும், பூசைச் சடங்குகளும் நிறைவேறின. கோவிலின் வட்டாரத்தில் இயற்றப்பட்டிருக்கும் பாஸ்கு மண்டபத்துக்கெதிரில் ஏறக்குறைய 10,000 ஜனங்கள் கூடியிருக்க அன்றிரவு 9-மணிக்கு இராஜரிஷி குருசங். அருளாந்து சுவாமிகள் கர்த்தரின் திருப்பாடுகளைக்குறித்து வெகு உருக்கமான பிரசங்கம் செய்தார். பிறகு சேசுக்கிறீஸ்துநாதர் நீசவாகனத்தின்மீதி லெழுந்தருளி தம்முடைய சீஷர்களுடன் ஜெருசலேம் பட்டணத்திற்குள் நுழைந்ததிலிருந்து, அவர் பாடுபட்டு சிலுவையிலறையுண்டு மரித்த வரையிலும், பார்ப்போரும் கேட்போரும் வியக்கத்தக்க விதமாய்ப் பாவனை

கள் நடத்தப்பட்டு, அதிகாலை 5-மணிக்கு ஆசந்திச் சுற்றுப்பிரகாரம் துக்ககரமாய்த் தொனிக்கும் பாண்ட் வாத்தியங்களுடன் நடந்தேறினது.

பெரிய சனிக்கிழமை காலையில் சங். காஸ்டெட் (J. Castets S. J.,) சுவாமிகளால் பாடல் பூசையும், மாலையில் சுமார் 10-மணி முதல் விடிய 4-மணி வரையிலும் கர்த்தர் உயிர்த்த பாவனையும் மிக்க விமரிசையுடன் நடத்தப்பட்டு, பிறகு பாஸ்கு மண்டபத்திலேயே வெகு கெம்பீரத்துடன் அமைக்கப்பட்டிருந்த பீடத்தில், சங். கோம்ஸ் சுவாமி யவர்களால் திவ்விய பூசை துவக்கப்பட்டது. ஏறக்குறைய, 2,000-க்கு அதிகமான பேர் திவ்வியநற்கருணை யுட்கொண்டார்கள்.

அன்று சாயந்திரம் 5½-மணிக்கு பான்ட் வாத்திய முழங்க, பாடகர்கள் உன்னதமான பாடல்கள் பாட, சங். கோம்ஸ் சுவாமி யவர்கள் திவ்விய சற்பிரசாதநாதரைக் கையிலேந்தி கோவிலுக்கு வெளியே சுற்றுப்பிரகாரம் வரும்போது ஆரோக்கியவுடையார் என்பவரால் விசித்திரமாய் ஜோடிக்கப்பட்டிருந்த முதல் பந்தலில் சற்பிரசாதநாதருடைய ஆசீர்வாதமும், பொதுவாக பாஸ்கு மண்டபத்தில் சிங்காரிக்கப்பட்டிருந்த இரண்டாவது கொட்டகையில் ஆசீர்வாதமும், 3-வது பந்தலில் மோஜைய வுடையார் என்பவரால் ஜோடிக்கப்பட்டிருந்த பீடத்தில் ஆசீர்வாதமும், கடைசியாய்ச் சுற்றுப்பிரகாரம் கோவிலுக்குள் நுழைந்த பிறகு மறுபடியும் திவ்விய நற்கருணை ஆசீர்வாதமும் கொடுக்கப்பட்டு பாஸ்கு ஞாயிறு முடிவு பெற்றது.

இவ்வுற்சவத்திற்காக பணவுதவி செய்தவர்களுடையவும், இவ்விஷயத்தில் அதிகச் சிரமம் எடுத்துக்கொண்டவர்களுடையவும் குடும்பங்கள் மென்மேலும் பெருகி வாழும்படிக் கடவுள் கிருபை புரிவாராக.

கடைசியாய், இதர மதஸ்தர்களால் அநேகமாய் சூழப்பட்ட இந்த புதுக்கோட்டை இராச்சியத்தில் கத்தோலிக் கிறீஸ்துவர்களால் நடத்தப்பட்ட இப் பக்திக்குரிய முயற்சிகளுக்கு கிருபை பாலித்தவராகிய திரியேக சர்வேசுரனுக்கு எந்நாளும் ஸ்துதியும் ஸ்தோத்திரமு முண்டாகக் கடவதாக.

7—4—1918.
புதுக்கோட்டை.

இப்படிக்கு,
கண்டுகளித்தோன்.

களுத்துறை பரிசுத்த லூர்துமாதா மஹோற்சவ திருநாளின் கொண்டாட்டம்.

1918-ம் ௵ ஏப்பிரல் ௴ 7௳ இலங்கையைச்சார்ந்த களுத்துறை அர்ச். சந்தக்குருஸ் கோவில் பரிசுத்த லூர்துமாதா கெபியில் இத்திருநாள் நடையேறப் பெற்றது. சனிக்கிழமை 6-ம்௳ இரவு 8-மணிக்கு மகோணை மடத்து பங்கு சுவாமியாராகிய சங்கைக்குரிய P. H. கோமூல் சுவாமிகள் சங். ஷாட், சங். அலோசியுஸ் பருணாந்து சுவாமிகளுடனும், மற்றும் அநேக சுவாமிமார்களுடனும் வெஸ்பர்ஸ் பாடி முடித்ததும், களுமுள்ளைச் சங்கைக்குரிய C. E. de பொன்சேக்கா சுவாமி அவர்கள், பயபக்தியான பிரசங்கமொன்று செய்துமுடித்தார். பிறகு திருயாத்திரைக்காரர்களும் மற்றவர்களும் தங்கள் தங்கள் கைகளில் மெழுகுவர்த்திகளைப் பிடித்துக்கொண்டு, கொரோனேஷன் பாண்டு வாத்திய முழக்கத்தோடு வரிசையாகவும் வெகு பயபக்தியாகவும் "ஆவேமரியா" என்னும் லத்தின் பாடலைப் பாடிக்கொண்டு கெபியைச்சுற்றி சுற்றுப்பிரகாரம் வந்தார்கள். பிறகு ஆற்றில் அநேக வர்ணங்களுடைய விளக்குகளை ஏற்றிய சிறுதோணிகளின் காட்சியையும் வாண வேடிக்கைகளையும் கண்டுகளித்தனர். அன்று ஜோடிக்கப்பட்டிருந்த பந்தல் தோரணைகளின் ஜோடினைகளையும், கெபியில் ஏற்றப்பட்டிருந்த அநேக மின்சார விளக்குகளின் பிரகாசம் அநேக சூரியக் குஞ்சுகளைப்போல் பிரகாசித்ததையும் பார்த்தவர்களுடைய கண்கள் ஆனந்தமடைந்தன. மறுநாட்காலையில் சங்கைக்குரிய N. Le பரேரி சுவாமி அவர்கள், சங். பிரட்டன் சுவாமிகள், சங். அலோசியுஸ் பருணாந்து சுவாமிகள் இவர்கள் துணையோடு பெரிய பாடல் பூசையைப் பாடி முடித்ததும் அநேக ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அன்னதானம் சம்பூரணமாய்ப் பரிமாறப்பட்டு இத் திருநாளின் கொண்டாட்டம் முடிவு பெறப்பெற்றது

12—4—1918.
களுத்துறை.

இப்படிக்கு,
கண்டுரைத்தோன்.

ஒன்றுமில்லாதவனாகிய நீ நித்திய கருணை சமுத்திர பரப்பிரம்மத்தை சதாகாலங் கண்டடைய வருகையில் சிருஷ்டிக்கப்பட்ட யாவையும் பரித்தியாகம் பண்ணி பேரின்பத்திற்கு ஊருணியாகிய பரமானந்தத்தை உறுதியாய்த் தழுவிப் பிடிப்பாயாக. —(அர்ச். சிலுவை அருளப்பர்.)

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All rights reserved.)

முதல் அதிகாரம்.

அர்ச். மோனிக்கம்மாளின் குடும்ப விசேஷங்கள், அவள் ஜனனமும் பாலப் பருவத்தின் பிரதம வருஷங்களும், அவளது விவாகமும்.

(இரட்சணியம் 332—353.)

அர்ச். மோனிக்கம்மாளே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

ஸிக்கா வெனிரிய என்னும் புராதன பட்டணத்தைத் தனது நெற்றித் திலகம் போல் கொண்டிருந்த பிரதேசத்தை ஒரு பிரயாணி கடந்து செல்லும்போது, கார்த்தேஜ் என்னும் பாழடைந்த நாட்டிலிருந்து ஹிப்போ என்னும் பாழ்நகருக்குப் போகும்வழியானது, பூலோகத்தார் கண்களுக்கு இரம்மியத்தை யுண்டாக்கும் அத்தியந்த சிங்காரமான பாகங்களுள் ஒன்

றென்று கண்டு மனச்சந்தோஷ மடைவான். அப்பிரதேசத்தை நீர்வளம் நிலவளம் மலைவளம் குடிவளமென்னும் நால்வகைச் செழுமை பொருந்திய தேசமென்று பூர்வீக ஜனங்கள் பெருமையாய்ச் சொல்வதுண்டு. அப்படி யவர்கள் சொல்வதற்கு ஒரு விசேஷ ஞாயமும் இருந்தது. எப்படியெனில், அதற்கு அருகாமையிலிருக்கும் கானகமானது தன்பேரில் பொழியும் மழைப் பெருக்கைப் பயன்படுத்திக்கொள்ளாமல், கடந்த பன்னிரண்டு நூற்றாண்டுகளாய் அப்பிரதேசத்தின்கண் வீணே புரண்டோடவிட்டதினால் இக்காலத்திலே முதலாய் நாம் பார்க்கிறது போல், கொஞ்சம் அதனைக் கொத்திப் பண்படுத்தினதும், கீழ் வெள்ளம் பாய்ந்த வளமையால் ஒலிவ், சித்ரன், கொடிமாதுளை, கிச்சிலி மரங்களும், அழகிய ரோஜா திராட்சக்கொடிகளும் உத்தியான வனம்போல் தோன்றி ஏராளமான பலனைத் தருகின்றது. மணற்பாங்கான அப்பூமியைச் சற்றுத்தோண்டினதும், ரோமானர்களின் சிறந்த சித்திரத் திறமையை நினைப்பூட்டும் கணக்கற்ற பொருள் வகைகளையும், பதுமைத் துண்டுகளையும், ஸ்தம்பங்களின் பாதங்களையும், சாசனந் தீர்ந்த கல்லறைகளையும், நாடகச் சாலைகள், ஸ்நான ஜாகைகள், தேவாலயங்கள், ராஜ பாட்டைகள் முதலிய இவைகள் இடிந்து நொருங்கி உருமாறிக் கிடப்பதையும் காணக்கூடும். ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால், ரோமானர்கள் ஒரு காலத்தில் நாகரீக மேன்மையில் மிகச் சிறந்து விளங்கி, மற்றச் சகல தேசஜனங்களைப் பார்க்கிலும் பேரோங்கி வந்தார்களென்று குறிப்படையாளங்களால் ரூபித்துக் காட்டும் மேற்கூறிய பொருள்களைப்போல் அநேக பொருள்களை அங்கு காணலாம்.

இப்படியாகப் பூமியானது தன் வளப்பம் பொருந்திய விருட்சவகைகளைக் காட்டிக் கண்ணைப்பறிக்கும் வனப்பலங்காரத்துடன் விளங்கியிருக்கும் இப்பாதை வழியாய் ஒருவன் சில மணிநேரம் பயணம் செய்து, அழகிய சித்திரந் தீர்ந்த வேலைப்பாடுகள் பாழடைந்து கிடப்பதை நோக்கும்போது, நீர்வளம் நிலவளம் பொருந்திய இந்நாட்டில் இவ்வற்புதப் பொருள் காட்சிகளினிடையில் நாகரீக மேன்மையில் விளங்கிவந்த பூர்வீக ஜனங்கள் ஒருவர்க்கொருவர் தோற்பு கெலிப்பின்றிச் சகல சுகபோகப் பெருமையில் வாழ்ந்துவருங்காலையில், இது எப்படி யிருந்திருக்கலாமென்று சிந்தித்து ஆநந்தசாகரத்தில் அமிழ்ந்திப்போவான். கம்பீரம் பொருந்திய அப்பூர்வீக ஜனங்களுள் வெவ்வேறு காலத்தில் ஹமில்கார், ஹன்னிபால், ஜகுர்த்தா என்னும் சூராதி சூரர்கள் தோன்றித் தங்கள் சாமர்த்தியத் திறமையைக்காட்டி ரோமானர்களின் பலம் ஒடுங்கும்படிச் செய்தனர். மேலும் அச்சனங்கள் வெவ்வேறுவகை மார்க்கங்களை அனுசரித்தபின், பிற்காலத்தில் அவை யாவற்றையும் திரஸ்கரித்துக் கிறீஸ்துநாதருடைய சத்திய வேதத்தைக் கையேற்றுக்கொண்டார்கள். அவர்கள் வமிசத்திலிருந்தே தெர்த்தூலியான், அர்ச். ஸிப்ரியான், லக்தான்சியுஸ், அர்னோபியுஸ், அர்ச். அகுஸ்தீன் என்பவர்களும், அர்ச். பெர்பெத்துவா, அர்ச். பெலிசித்தா ஆகிய இவர்களைப் போன்ற அநேக கன்னியர்களும் வேதசாட்சிகளும் உதித்தனர். மேலும் இந்நாட்டில் பிரயாணம் செய்பவன், விர்ஜில் என்னும் ஆசிரியர் சிறப்பாய்ப் பாடுவதுபோல், மனிதன் அடையும் பக்குவத்தைவிடக் கொஞ்சம் தாமதமாயும் சற்று அழகு குறைந்ததாயும் விளைவுகள் பக்குவ மடையக்கூடிய செழிப்புள்ள பூமியில் தான் பிரயாணம் செய்வதாக உணர்வான்.

இப்பாதையின் மத்தியில், மலர்ந்த முகத்துடன் உதயமாகும் சூரியனது கதிரொளியால் பிரதிபிம்பித்து அடர்த்தியாய்ப் பரவியிருக்கும் ஒலீவ் மரத்தின் சோலைக்குப் பின்புறமாயிருந்த இரண்டு குன்றுகளின் சாரலில், ஒரு சாமானிய கிராமம் இருக்கின்றது. இக்கிராமத்தை நமது காலத்து அராபியர்கள் சௌக் ஆராஸ் என்றழைப்பதுண்டு, ரோமர்களின் புராதன நகராகிய தகாஸ்தே இருந்த இடத்தின் ஒரு பாகத்தில், அக்கிராமத்தைச் சார்ந்த சில வெண் குடிசைகள் கட்டப்பட்டிருக்கின்றன. விசாலமா யிருக்கும் மற்றபாகம் வெறும் மைதான வேளியே யன்றி வேறன்று. இதில் இங்குமங்கும் குவியல் குவியலாய் அநேக மண்மேடுகளைக் காணலாம். இங்கு பாழடைந்த பட்டணத்திற்குரிய பல அபூர்வ சாமான்கள் பாதி மணலில் மறைந்தும், பாதி வெளியில் தோன்றியும் கிடக்கின்றன. அகான்து காரோப் என்னும் முட்செடிகளின் புதர்கள் இங்குமங்கும் இருப்பதுடன், அவைகளினிடையில் ஆஞ்சேலிக்கா என்னும் கொடிச்செடியும் முளைத்து கொஞ்சம் நிழலைத் தருகின்றது.

இப்பீட பூமியின் அடியிலிருக்கும் விசாலமான புற்புனத்தில் அநேக நதிகள் பாய்ந்து அதனைக் குளிரச்செய்து, மீண்டும் முன்னுக்கு ஓடி

கடைசியாய் மெட்ஜெரவில் விழுகின்றன. இந் நதிகளின் ஜலம் கோப்பியமான தாதுவஸ்துக் கள் கொண்டதாகையால், ரோமானர்கள் தேகா ரோக்கியத்திற்காக அதில் ஸ்நானம் செய்வ துண்டு. அந்நதிகளுக்கப்பால், மணற்பாங்கான பூமி பாலைவனம்போல் மனுஷசஞ்சாரமற் றிருக் கும். உயர்ந்து பருத்திருக்கும் சிந்தூர மரங்கள் வனம்போல் வளர்ந்து வானத்தை யளாவிக் கொண்டிருக்க, அடர்த்தியான அம்மரங்களின் இலைகள் அப்பீட பூமிக்கு ஒரு திரைச்சீலைபோல் தோன்றும். இதற்கப்பால் கண்ணுக்கெட்டாத தூரத்தில் சமுத்திரமானது சில சமயங்களில் அமைதியாயும் சில சமயங்களில் கொந்தளிப்பா யும் இருக்கும்.

நான் இப்போது சொல்லத் தொடங்கி யிருக்கும் அர்ச்சியசிஷ்டவளின் ஜனனஸ்தா னத்தை இங்கே பிரகாசம் பொருந்திய அடி வானத்தைக் குடைபோல் கொண்டிருக்கும் இச் சாதாரணமான குன்றுகளின்மேல் கர்த்தர் நிய மித்தார். நான் இவைகளைச் சாதாரணமான குன் றுகளென்றேன். ஏனெனில் அவை இருக்குமிட மாகிய தகாஸ்தே யென்பது அவ்வளவு அழகு வாய்ந்த பட்டணமாயிருந்தும், பிலிணி என்னும் ஆசிரியன் அப்பட்டணத்தில் வசித்த ஜனங்க ளின் பெருமையை ஒரு உசிதமான வாக்கியத் தில் எடுத்துக் காட்டும்போதுமாத்திரம் அப்பட் டணத்தைக் குறிக்கிறானே யொழிய, மற்றப்படி எந்தப் பூர்வீக கிரந்தகர்த்தாவும் அதைப்பற்றிப் பேசினதே கிடையாது. கர்த்தர் இவ்விடத் தைத் தெரிந்துகொண்டதைப் பார்த்தால், அவர் முன்னதாகவே அர்ச். அகுஸ்தின் என்பவரைப் பற்றி யோசனை கொண்டிருந்ததாகவும், ஒரு விசாலமான மைதான வெளியிலிருந்து கழுகின் கூட்டைப்போல் எழும்பியிருக்கும் இப்பீட பூமி அவருக்காகவே சிருஷ்டிக்கப்பட்டதாகவுந் தோன்றுகிறது. ஒரு தாயாருடைய உத்தம குணா திசயங்கள் யாவும் தன் மக்களில் விளங்குமென் றும், அவள் ஒரு நாள் தன் மக்கள்பேரில் விட இருக்கும் சுவாசத்தைச் சுவாசிக்கும் இடம் முத லாய் அவர்களுக்குச் சரியொத்ததாயிருக்கு மென்றும் நமக்குக் கற்பிக்கும்படி கர்த்தர் அர்ச். மோனிக்கம்மாளை இங்கு ஜனிப்பிக்க சித்தங் கொண்டார்.

பிரிசுத்த பிதா சில்வெஸ்தர் என்னும் பாப் பாசர் பட்டம்பெற்ற 18-ம் வருஷத்திற்குப் பிறகு, மாக்ஸென்ஷியூஸை வெற்றிகொண்ட ஜெயசீலனாகிய கொன்ஸ்தான்தின் என்பவரும் மற்றும் இராச குடும்பத்தாரும் கிறீஸ்து வேதத் தைத் தழுவிய 20-ம் வருஷத்திற்குப் பிறகு, இரட்சண்யம் 332-ம் ஆண்டில் நமது அர்ச்சிய சிஷ்டவள் பிறந்தாள். இதுவரைக்கும் கொடுங் கோலர்களுடைய நெருக்கிடைக்கஞ்சி சுரங்கங்க ளில் ஒளிந்திருந்த கிறீஸ்துவர்கள் அப்போது தான் தைரியத்துடன் வெளிப்பட்டுவரத் துணிந் தார்கள். மாரிகாலத்தில் வெகுநாள் பரியந்தம் ஓயாமல் மழைபெய்து ஒழிந்தபிறகு, வசந்தகா லம் வரவே சூரியன் தன் வெப்பமுள்ள கிரணங் களை வீசியவுடன் மரங்கள் செடிகள் யாவும் கண்ணுக்கு ரம்மியமாய்த் தோன்றுவதுபோலும், அதை மனிதர்கள் கண்குளிரக் கண்டு முகம லர்ச்சி கொள்ளுவதுபோலும், முந்நூறு வருஷம் வரைக்கும் திருச்சபையானது துன்பத்திலும் துயரத்திலும் நாள் கழித்து வந்தபிறகு. தேவ கிருபையால் அவைகளிலிருந்து விடுபட்டு ஜெய சீலியாய் வெளிப்பட கணக்கற்ற கிறீஸ்துவ ஸ்திரீ பூமான்கள் சத்திய வேதாசாரங்களை இடைஞ்சலின்றி யநுசரித்து, உத்தம நெறியில் ஒழுகி, மரித்து, மோட்சபேறடைந்து அர்ச்சிய சிஷ்டவர்களானார்கள். அர்ச். மோனிக்கம்மாள் தகாஸ்தேயில் பிறந்த அதே வருஷத்திலேயே, அர்ச். ஜெரோமென்பவர் தல்மாஷியாவைச் சார்ந்த ஸ்திரிதன் பட்டணத்தில் பிறந்தார். மேலும் அவள் பிறந்த நாலு வருஷத்திற்குப் பிறகு அர்ச். கிறகோரி நஜியான்ஸ்ன் என்பவ ரும், அதற்கு ஒருவருஷத்திற்குப் பிறகு அர்ச். பேசில் என்பவரும் பிறந்தார்கள். அவள் பிறக் கும்போது அர்ச். கிரேகோரி என்பவர் இரண்டு வருஷத்துக் குழந்தை. கிஸ்ஸன்பாய்த்தியாஸ் நகர் அர்ச். இலாரியாரும், தூர்ஸ் நகர் அர்ச். மர்த் தீனும் இவ் வர்ச்சியசிஷ்டவர்களுக்குக் கொஞ் சம் மூத்தவர்கள். எப்படியெனில், மோனிக்கம் மாள் பிறக்கும்போது அர்ச். இலாரியாருக்குப் பதினாறு வயது. அப்போதுதான் ஞானஸ்நானத் திற்கு ஆயத்தம்செய்துகொண்டிருந்தார். அர்ச். மர்த்தீன் என்பவரோவெனில் குருப்பட்டம் பெற்றிருந்தார்.

அப்போது அர்ச். அமிர்தநாதராவது, அர்ச். கிறிசொஸ்தோம் அருளப்பராவது, அர்ச். நோலாபவுலீனாராவது பிறக்கவில்லை. இவர்க ளுக்குத் தாயாராக இருக்கப் பாக்கியம்பெற்ற பத்தியுள்ள இளங் கன்னிகைகள், தாங்கள் சற் றேனும் எதிர்பாராததும், தாய்மார் என்னும்

உந்நத அந்தஸ்திற் குரியதுமான அலுவலுக்குத் தாழ்ச்சிப் பிரகரணங்களினாலும் ஜெப வேண்டுதல்களினாலும் தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தார்கள். இந்தப் பிரதாபம் நிறைந்த அர்ச்சியசிஷ்டவர்களுள் வயது மிகுந்தவராயிருந்த அர்ச். அத்திஞவியுஸ் என்பவர் ஒருவரே, தமது 27-ம் வயதில் அலெக்சாந்திரியா என்னும் பட்டணத்திற்கு மேற்றிராணியாராக நியமிக்கப்பட்டு, அத்தியந்த நேர்மையோடும் ஒப்புவமையில்லாத திறமை சாமர்த்தியத்தோடும் சகலவித துன்ப நெருக்கிடைகளோடு போராடி, ஐம்பது வருஷம் வரைக்கும் ஞான ஆளுகை புரிந்துவந்தார். இவர் அத்தனை வருஷம் ஆளுகை புரிந்து வந்ததைப் பார்த்தால், தெய்வ ஊழியத்தில் தமது கூட்டாளிகளாகிய மற்ற அர்ச்சியசிஷ்டவர்கள், வயதிலும் அநுபோகத்திலும் மிகுந்து, பூரண பக்குவமடைந்து, தமது காலத்திற்குப் பிறகு தமது ஸ்தானத்திற்குவர அவர்களுக்குப் போதிய சமயம் கொடுத்ததைப்போல் தோன்றுகிறது. கொன்ஸ்தான்தின் என்னும் அரசராலே முதலாய் விலக்கித் தடுக்கக்கூடாத துன்பநிர்ப்பந்தங்களால் வேதசாட்சிகள் வாதைப்பட்டு வருங்காலையில், திருச்சபையின் கீர்த்திபெற்ற வேதபாரகர்கள் பிறக்கச் சற்று முன்னமேயே சிறந்த புண்ணியங்களினால் விளங்கிய நல்ல பெருமைவாய்ந்த கிறீஸ்துவ குடும்பத்தில் ஒரு பாலகி ஜனித்தாள். இக்குழந்தையை உந்நத வேதபாரகராக விளங்கிய அர்ச். அகுஸ்தீன் என்பவருக்குத் தாயாராகக் கர்த்தர் தெரிந்துகொண்டமையால், இது மற்றெல்லா பிள்ளைகளைவிட விசேஷ பாக்கியவதி என்னத்தகும். இப்பாலகிக்கு மோனிக்கம்மாள் என்று பெயர் கொடுத்தார்கள். இப்பெயரை வேறு எந்த அர்ச்சியசிஷ்டவளும் அதுவரைக்கும் தரித்திருந்ததில்லை. அப்பெயருக்குத் தகுந்தாப்போலவே, அவள் துன்பத்திலும் துயரத்திலும் ஆறுதலும் நம்பிக்கையும் கொண்டிருந்தாள். அவள் தகப்பன் யாரென்று நமக்குத் தெரியவில்லை. அவள் தாய் பக்கந்தம்மாள் என்பதாய்த் தோன்றுகிறது. இருவரும் பத்தியில் சிறந்த கிறீஸ்துவர்களே.

(இன்னும் வரும்.)

பரிசுத்த அச்சயஞகிய அமலன் திருவடியில் சேர்ந்தோர் அதைவிடாமல் மற்றெல்லாவற்றையும் விட்டுவிடக்கடவர்.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாச்சாரம்.

ஒரு புதிய தீவு.—வங்காளக்குடாக்கடலில் சமீபத்தில் புதிய தீவு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். இதனுடைய பெயர் இனிமேல் தெரியவரும் போலும்.

பிளேக்—இக் கொள்ளை நோயால் இந்தியாவில் ஒரு வாரத்தில் இறக்கிறவர்கள் 32,000 பேரென்று சொல்லப்படுகிறது.

மனந் திரும்பல்.—சென்ற மாதத்தில் சில புரோடஸ்டாண்டு பாதிரிமார்கள் மனந் திரும்பி கத்தோலிக்கு வேதத்திற் சேர பாக்கியம் பெற்றூர்கள். இவர்களிலொருவர் படையிற் சேர்ந்துகொண்டார். வேறு மூவர் குருப்பட்டத்திற்கு படிக்கும்பொருட்டு ரோமாபுரிக்குப் பயணப்பட்டு போயிருக்கிறூர்கள்.

இலங்கைக்குப் புது கவர்னர்—இத்தீவுக்கு கவர்னராயிருந்த ஆண்டர்சன் பிரபு சமீபத்தில் காலமாகிவிட்டபடியால், இவருக்குப் பதிலாய் கவர்னராக கிளிபோர்ட் பிரபு நியமனம் பெற்றிருக்கிறூர். இவர் புத்தி சாமர்த்திய முள்ளவரென்றும், தேர்ந்த பரிபாலகரென்றும், மேலும் ஓர் நல்ல கத்தோலிக்கரென்று மறிந்து சந்தோஷிக்கிறோம்.

பரிதாபத்துக்குரிய ஓர் விபத்து.—அமிரிஸ்டாரில் பொன்பள்ளி வாசலில் நடைபெற்றபண்டிகையைப் பார்க்கும்படி ஏராளமான ஜனங்கள் போயிருந்தார்கள். அவர்களிற் சிலர் அருகாமையிலிருந்த ஒரு பங்களாமாடி நிறைய ஏறி வேடிக்கைபார்த்துக்கொண்டிருக்கையில், அம்மாடியின் தளம் திடீரென்று இடிந்துவிழ 40 பேர் உடனே இறந்தார்கள். காயப்பட்டவர்கள் 100 பேருக்கதிகமென்று சொல்லப்படுகிறது. நினையாத நேரத்தில் திருடனைப்போல் மரணம் வருமென்பதற்கு இதோர் நல்ல அத்தாட்சி.

ஜேனரல் போக் (Foch).—இவர் தற்போது பிரான்சு தேசத்தில் நிகழ்ந்துவரும் கொடிய சண்டையில் ஆங்கிலேய, பிரான்சிய, அமெரிக்க சேனைகளுக்கு பெரிய தளக்கர்த்தனாய் நியமிக்கப்பட்டிருக்கிறூர். இவருடைய வீரசூரத்தைப்

பற்றி எல்லோரும் பெருமையாய்ப் பேசிக் கொள்ளுகிறார்கள். இவரை ஏற்கெனவே தலைமை தளக்கர்த்தனை நியமித்திருந்திருந்தால் அநேக காரியங்கள் அனுகூலமாய் முடிந்திருக்குமென்று சில பத்திரிகைகள் கூறுகின்றன. இவர் ஓர் சிறந்த கத்தோலிக்கர். இவருடைய சகோதரரும் சேசு சபையில் குருவாயிருக்கிறார். இவருக்குத் தற்போது பிராயம் 65.

கொள்ளையாடல்.—பாஸ்ஸேன் டிவிஷனைச் சேர்ந்த டாணு ஒன்றில் 40 பேர் கைதிகள் அடைக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் எப்படியோ அருகிலிருந்த ஆயுதசாலைக்குள் நுழைந்து, அங்கு அகப்பட்ட ஆயுதங்களையெல்லாம் கைப்பற்றிக்கொண்டு, காவற்காரர்களை அடித்து துரத்திவிட்டு, கஜானுவுக்குள் நுழைந்து பணத்தையெல்லாங் கொள்ளையாடினதுமல்லாமல், பக்கத்திலிருந்த ஓர் கிராமத்துக்குச் சென்று அகப்பட்டதையெல்லாம் சுற்றிக்கொண்டும் ஒரு காட்டுக்குள் ஓடிப்போய் ஒளிந்துகொண்டிருக்கிறார்களாம். போலீசார் இவர்களை இன்னும் பிடித்தபாடில்லை.

சென்னை, மயிலைக் காட்டுக்கோவிலில் களவு.-சென்றமீ 17உ புதன்கிழமை காலை $10\frac{1}{2}$-மணி வேளையில் சுவாமியார் பூசை வஸ்திரம் உடுத்திக்கொள்ளும் அறையின் ஜன்னல் கம்பிகளை நீக்கிக்கொண்டு, திருடன் ஒருவன் உள்ளே நுழைந்து, அர்ச். ஞானப்பிரகாசி மாதாவின் முடி, திவ்யநற்கருணைப் பாத்திரத்தின் மூடி, பூசைப்பாத்திரம், மாதாவின் பாதத்திலிருந்த வெள்ளிச் சந்திரபிறை, மற்றும் சுரூபங்களின் முடிகள் இவைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு ஓட ஆயத்தமாயிருக்கையில், திடீரென்று உபதேசி கதவைத் திறந்து உள்ளே வரும் சத்தத்தைக்கேட்டு பூசைபாத்திரத்தைமாத்திர மெடுத்துக்கொண்டு ஷெ ஜன்னல் வழியாகவே ஓடிப்போனான். இக்கோவிலில் இது மூன்றாவது முறையாக நடந்த களவு. திருடன் இன்னும் அகப்படவில்லை.

ஆயிரம் வருஷத்து விரை நெல்.—ஜப்பான் தேசத்தில் புத்தமத பள்ளிச்சாலையொன்றில் மரத்தாற் செய்யப்பட்ட ஓர் பூர்வீக புத்தனுடைய சிலையிருக்கின்றது. இந்தச் சிலைக்குள் ஆயிரம் வருஷத்து விரை நெல் இருந்ததென்றும், இதைப் பத்திரப்படுத்தி வைத்திருந்த பைக்குள் இதைப் பற்றிய விவரங்கள் யாவும் வரையப்பட்டிருந்த பத்திர மொன்றிருந்ததென்றும் சொல்லப்படுகிறது. இந்த விரைநெல்லை விதைத்து விளையும் நெல்லையே ஜப்பான் தேசத்து சக்கரவர்த்தி தமது போஜனத்துக்கு உபயோகப்படுத்திக் கொள்வதாக சில பத்திரிகைகள் கூறுகின்றன. இரண்டு மூன்று வருஷத்து விரை நெல் விளையாதென்கிறார்கள் குடியானவர்கள். அப்படியானல் ஆயிரம் வருஷத்து விரை நெல் முளையுமோ?

பெல்ஜியத்தின் தற்கால நிலைமை—இத்தேசம் நிகழும் யுத்தத்துக்கு முந்தி செல்வச் செருக்கிலும் இன்னுமற்ற சௌகரியங்களிலும் ஐரோப்பாவின் மற்ற தேசங்களைவிட அதிகமாய்ச் சிறந்து விளங்கிற்று. சொற்ப சம்பளக்காரனும் மிக்க சுகமாய்ச் சீவித்துவந்தான். கையில் 10 ரூபாயிருந்தால் தேசமுழுமையும் சௌகரியமாய்ச் சுற்றிப்பார்க்கப் போதுமென்று சொல்லுவார்கள். இப்பேர்ப்பட்ட தேசம் இப்போது படும்பாடு சர்வேசுரன் ஒருவருக்குமாத்திரம் தெரியும். விசேஷமாய் ஜெர்மனியருடைய கைவசத்திலிருக்கிற பெல்ஜிய நாட்டார் படும் துன்ப துரிதங்கள் சொல்லுந் தரமல்ல. அந்நாட்டில் தற்போது சாப்பாட்டுப் பண்டங்கள் விற்கும் விலையைக் கவனியுங்கள். 1 பவுன் காப்பிக்கொட்டை அல்லது தேயிலை ரூ. 30. 1 பவுன் காய்ந்த பன்றி இறைச்சி ரூ. 7. 1 பவுன் வெண்ணெய் ரூ. 8. 1 பவுன் மாமிசம் ரூ. 9. 1 பவுன் உருளைக்கிழங்கு அணு 12. 1 கோழிமுட்டை அணு 6. இவ்வாறே இதர ஆகாரவஸ்துக்களும் உயர்ந்த விலைக்கு விற்பனையாகி வருகின்றன. அத்தேசத்தாருக்கு ரொட்டியே முக்கிய உணவாகையால், ரொட்டியும் மிக்க கிராக்கியாய் விற்பனையாவதுடன் பல தருணங்களில் மூன்று நான்கு நாட்களுக்கு ரொட்டியே அகப்படாது. ஆகையால் அநேகர் வறுமையாலும், பசியாலும், வியாதியாலும் சாகிறார்கள். என்னபரிதாபம்!!

பிராஞ்சு தேசத்தின் யுத்த நிலை.—ஜெர்மனிக்கும் ருஷியாவுக்கும் சமீபத்தில் ஏற்

பட்ட சமாதானத்தை முன்னிட்டு, ஜெர்மனியர் ருஷியாவிலிருந்த தங்களுடைய சேனைகளையெல்லாந் திரட்டி பிரான்சுக்குக் கொண்டுபோய், அவைகளை முன்பின் யோசியாமல் அவ்விடத்திலிருந்த ஐக்கிய சேனைகளின்மேல் பாயவிட்டதின் பலனை சில விடங்களைத் தங்கள் வசமாக்கிக் கொண்டார்களென்றாலும், சுமார் 2,3 லட்சம்பேரை சில தினங்களுக்குள் இச்சண்டையில்சாகக்கொடுத்தார்களென்று தந்தி சமாச்சாரம் எட்டியிருக்கிறது. மேலும் இவர்கள் பிரமாண்டமான பீரங்கிகளை 45 மைல் தூரத்திலிருக்கும் பாரிஸ் பட்டணத்தின்மேல் பிரயோகஞ் செய்கிறார்களென்றும், இதனால் உயிர்ச்சேத முண்டாவதுடன் சிறந்த தேவாலயங்களும் மாளிகைகளும் இடிந்து நாசமாகின்றனவென்றும் சொல்லப்படுகிறது. இப்பாழும் யுத்தம் துரிதத்தில் முடிவாகி உலகத்திற்கு சமாதானமும் சந்தோஷமு முண்டாக சர்வேசுரன் கிருபைபுரிவாராக.

விசுவசியாவிட்டால் பிஷப்புப்பட்டமும் உயர்ந்த சம்பளமும் பெறமுடியாதே!! —திவ்ய கர்த்தரான சேசுக்கிறீஸ்துநாதருடைய தெய்வீகத்தை விசுவசியாமல், அதை மறுத்து அநேக முறைகளில் தம் சபையாருக்குப் பிரசங்கஞ் செய்துவந்த என்சன் எனும் புரோடஸ்டாண்டு பாதிரியாருக்கு பிஷப்புப்பட்டங் கொடுக்கப் போகிறதைக் கேள்வியுற்ற ஷை மதத்துப் பிஷப்புகளிற் சிலரும், இன்னும் அநேக பாதிரிமார்களும், பிரபுக்களும், பிரஜைகளும் அவருக்குப் பிஷப்புப்பட்டங் கொடுக்கத்தகாதென்று ஆட்சேபித்து அரசருக்கு அர்ஜி கொடுத்திருந்த சங்கதியை அநேகர் அறிவார்கள். என்சன் பாதிரியாருக்குமேற்றிராணியார் பட்டாபிஷேகம் செய்யவேண்டியவராகிய காண்டர்பரி பெரிய மேற்றிராணியார் அவருக்குக் கடிதமெழுதி “அப்போஸ்தலர் உண்டாக்கின விசுவாச மந்திரத்திலுள்ள சத்தியங்களை நீர் விசுவசிக்கிறீரோ?” என்றுகேட்டதற்கு, அவர் தனக்குப் பிஷப்புப்பட்டமும் அதனால் தனக்கு மாதமாதங் கிடைக்கப்போகும் அநேக நூறு ரூபாயும் எங்கே கிடையாமற் போகுமோவென்று பயந்து, விசுவாச மந்திரத்திலுள்ள சகல சத்தியங்களையும் தாம் அதியோக்கிய பக்தியாக விசுவசிக்கிறதாக எழுதியனுப்பினர். நம தாண்டவருடைய தேவசுபாவத்தைப்பல முறைளில் மறுதலித்த இவர் பிஷப்பாக அபிஷேகஞ் செய்யப்படுவதற்குத் தக்க யோக்கியரே!!

கல்கத்தா அர்ச். சூசையப்பர் கோவில். —இக்கோவில் பங்கு சுவாமியாராகிய சேசுசபை C. லிம்பேர்க் சுவாமிகளின் கோரிக்கைக் கிணங்கி, கடந்த டிசம்பர் மாதத்திலும், தபசுகாலத்தின் கடைசி வாரத்திலும் திருச்சி, அர்ச். சூசையப்பர் காலேஜைச்சேர்ந்தசங். அமலோற்பவநாத சுவாமிகள் (சேசுசபை) கர்த்தர் பட்டபாடுகளைப்பற்றியும் தேவ மாதாவின் வியாகுலங்களைப்பற்றியும் கல்லும் கரையுமாறு பிரசங்கித்து, அவகேடாய்ச் சீவித்து வந்த அநேகர் மனந்திரும்பி ஒழுங்காய் ஒழுகும்படி செய்ததுமல்லாமல், புதிதாய் ஞானஸ்நானம் பெற்ற அநேக அஞ்ஞானிகளுக்கும் அறுவது சிறு பிள்ளைகளுக்கும் புது நன்மையுங் கொடுத்தார். மேற்படி கோவிலைச் சேர்ந்த திருக்குடும்ப சங்கத்தார் இங்கிலீஷிலும், பங்கு கிறீஸ்துவர்கள் தமிழிலும் தங்களுடைய நன்றியறிதலைக்காட்ட சங். அமலோற்பவநாத சுவாமிகளுக்கு வந்தனோபசார பத்திரங்கள் வாசித்தார்கள். சுவாமி யவர்களும் அவைகளுக்குத் தக்க பதில் உரைத்து, தம்முடைய அனுதின ஜெபத்தில் இக்கிறீஸ்துவர்களுக்காகவும் விசேஷமாய் திருக்குடும்பத்தின் சபையாருக்காகவும், கனம் N. ஆபிராம் பிள்ளை யவர்கள், சௌபாக்கியவதி அ. செசீலியம்மாள், அர்ச். அன்னம்மாள் பள்ளிக்கூடத்தின் உப உபாத்தியாயினி அம்மாளுக்காகவும், இவர்களுடைய குடும்பங்களுக்காகவும் வெண்டிக்கொள்வதாகவுஞ் சொல்லி எல்லோருக்குந் தமது ஆசீரையளித்தனர்.

ஆகாய கப்பலோட்டுவேதில் மிகவும் பேர்போனவரான குயின்மேர் என்பவருடைய தேகவியோகம்.—நிகழும் கொடிய யுத்தம் நிலத்தில் மாத்திரமல்ல, ஆனால் நீருக்குள்ளும் ஆகாயத்திலும் நடந்து வருகின்றதென்று அறியாதவர் ஒருவருமில்லை. ஆகாயக்கப்பலை யோட்டுவதிலும், அதிலிருந்து வெடிகுண்டுகளை சத்துருக்கள்மேல் பிரயோகஞ்செய்வதிலும் மிக்க சாமர்த்தியம் படைத்தவர் குயின்மேர்

என்பவர். இவர் ஓர் பிரான்சுக்காரர். இவர் சென்ற மாதத்தில் ஓர் நாள் போர்முனையி லிருந்து தம்முடைய ஆகாயக்கப்பலிலேறி வெளியே புறப்பட்டார். புறப்பட்டுப்போ னவர் திரும்பி வாராததினால், அநேகர் துக் கப்பட்டுக்கொண்டிருந்தார்கள். மறுநாள் தங்களுடைய தலைக்குமேல் ஓர் ஆகாயக் கப்பல் பறந்துகொண்டிருக்கவும் அதிலி ருந்து ஓர் பை கீழே விழவும் கண்டார்கள். விழுந்த பையை அவிழ்த்துப் பார்க்கை யில் அதற்குள் குயின்மேர் தரித்திருந்த உடைகள் இரத்தக்கறைபட்டிருக்கவும், அவருடைய சட்டை சாக்கில் சில பாங்கு நோட்டுகள் பத்திரப்படுத்தப்பட்டு ஒரு கடிதம் வைத்திருக்கவுங் கண்டார்கள். கடி தத்தை வாசித்துப் பார்க்கையில் அதில் இறந்துபோன குயின்மேருடைய அடக் கச் சடங்கு நடந்தேறும் நாளும், நேரமும் இடமும் குறிக்கப்பட்டிருந்தது. மேலும் பிரான்சு ஆகாயப்படையைச் சேர்ந்தவர் கள் தங்கள் கப்பல்களிலேறி ஷெ சடங் கிற்கு விஜயஞ் செய்ய வரலாமென்றும், அவர்களுடைய கப்பல்கள் எவ்வளவு தாழப்பறந்தாலும் அவைகள்மேல் குண் டெறியப்படுமென்று அவர்கள் பயப்பட வேண்டியதில்லையென்றும் ஜெர்மன் ஆகா யப்படை கப்பித்தான் தன் கையொப்ப மிட்டு எழுதியிருந்தான். அப்பால் இவர்க ளுக்குள் 15 ஆகாய கப்பல்களைச் சேர்ந்த வர்கள் யாதோர் அபாயமுமின்றி பறந்து, குறித்த விடத்துக்குக் குறித்த நாளில் போய்ச்சேர்ந்தார்கள். இவர்கள் சேர்ந்த பிறகு குயின்மேருடைய சவப்பெட்டி கோவிலுக்குக்கொண்டு போகப்பட்டு, அங்கு நடக்க வேண்டிய திருச் சடங்கு கள் நடந்தேறின. சவத்தை யடக்கஞ் செய்வதற்கு முந்தி ஜெர்மன் படை கப் பித்தான் இறந்துபோன குயின்மேரு டைய புத்திக் கூர்மையையும், சாமர்த்திய திறமையையும் பற்றி சிலாக்கித்து பேசிய பின், பிரான்சுக்காரரே ஆகாய கப்பல்களை யோட்டுவதில் தேர்ந்த பண்டிதர்களென் றும், தாங்கள் அவ்வளவு பாண்டித்தியத் தை யடைந்தவர்களல்லவென்றும், தாங் கள் ஒருபோதும் குயின்மேரை மறக்கமு டியாதென்றும் உபந்நியாசித்ததை அங்கு கூடியிருந்தவர்கள் கேட்டு கண்கலங்கி துக் கித்தார்கள். அடக்கம் முடிவான பிறகு பிரான்சு ஆகாய கப்பல்களுக்கு எண்ணை முதலியவைகளை ஜெர்மனியர் கொடுத்து தவ அவைகள் புறப்பட்டு ஒரு மணிநேரத் துக்குள் ஒரு ஆபத்துமின்றி தங்களுடைய போர் முனைக்குப் போய்ச் சேர்ந்தனவாம்.

கண்டி குருமடம்.—இம்மடமுண்டாகி நாளது மீ 18உ சரியாய் 25 வருடங்களா கிறபடியால், அன்று அவ்விடத்தில் இதன் வெள்ளி ஜூபிலி மஹோற்சவக் கொண் டாட்டம். மடத்து வித்தியார்த்திகளுக் கேற்ற ஒரு தேவாலயத்தையும் சிலவசதிக ளையும் இந்த ஜூபிலியின் ஞாபகார்த்த மாய்க் கட்டிமுடிக்க எண்ணியிருக்கிறபடி யால், சந்தாதாரர்கள் இதன் நிதிக்கு தங் களாலியன்றஉதவிசெய்து ஷெ மடத்தைச் சன்மானிப்பார்களென நம்புகிறோம்.

மைசூர் ராஜ்யத்தைச் சேர்ந்த டோர் ணள்ளி க்ஷேத்திரத்தின் கண் அர்ச். அந் தோனியார் திருவிழா.—வழக்கப்படி நிக ழாண்டு மேமீ 21-ம் தேதி செவ்வாய்க் கிழமையன்று ஷெ டோர்ணள்ளி அர்ச். அந்தோனியார் கோவிலில் காலை 8-மணிக் குப் பாடல்பூசையும், மாலையில் தேவநற் கருணை ஆசீர்வாதத்திற்குப் பின் தேர்சுற் றுப்பிரகாரமும் நடந்தேறும். திருயாத்தி ரைக்காரர்களுக்கு அநுகூலமாகத் தற் போது ரயில்வண்டியும் டோர்ணள்ளிக்கு வெகு சமீபத்தில் ஓடுவதால், பக்தோத் தம ஸ்த்ரீ பூமான்கள் விஜயஞ் செய்து கோடியற்புதராகும் அர்ச். அந்தோனியார் வேண்டுதலாசீர்வாதத்துக்குப் பாத்திரரா வார்களாக.

S. டிசில்வா,
20—4—18. விசாரணை குரு.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுக்கலத்துக்கு 4-ரூபாயு மாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை.

குன்னூர்.

இவ்வூர் அர்ச். அந்தோனியார் கோவில் உபதேசியார் A. L. ஜோசேப் அவர்கள் செல்வ புதல்வியும், A. அம்புரோஸ் அவர்கள் மனைவியு

மாகிய ஞானப்பிரகாசம்மாள் நிமோனியா காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு 1918ஞு மார்ச்சுமீ 17வ ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் 4 1/4-மணிக்கு தன் தாய் தந்தையரையும், சகோதரர்களையும், புருஷனையும் பரதவிக்கவிட்டு தனது 19-வது வயதில் பரலோக பிராப்தி யடைந்தனள். இதை வாசிக்கும் சகோதரர்கள் அவள் ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., பிரி., திரி. வேண்டிக் கொள்ள கேட்டுக்கொள்ளுகிறேன்.

A. L. ஜோசேப்பு,
உபதேசியார்.

ம. அய்யாப்பிள்ளை விக்ற்றேரியா என்ற அந்தோனி விக்ற்றேரியா அவர்களின் தேகவியோகம்.

"மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமம் சர்வேஸ்பரனுடைய இரக்கத்தால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது."

ஏழு கடற்றுறைகளில் கீர்த்திபெற்ற வேம்பார் எனும் நிம்பைமா நகரில் பரதகுலத்தவருள் பூர்வமாய்க் கியாதிவாய்ந்து விளங்கும் கோவில் அதிகாரிகள் வம்சத்தி லுதித்தவரும், காலஞ்சென்ற ம-ா-ா-ஸ்ரீ, மனுவேல் சந்தியாகு விக்ற்றேரியா கோவில் பிள்ளை அவர்களின் அருந்தவப் புதல்வருள் மிக்கப் புகழ்பெற்றவரும், சன்மார்க்கம், வாய்மை, குலாபிமானம், பரோபகாரம் ஆதிய நற்குணங்களின் களஞ்சியமுமாகிய ஸ்ரீமான் ம.அய்யாப்பிள்ளை விக்ற்றேரியா என்ற அந்தோனி விக்ற்றேரியா அவர்கள் கலைஞானபுரம் அர்ச். அந்தோனியார் ஆலயத்திற்குத் திருயாத்திரையாய்ப் போயிருக்கையில் சென்ற மார்ச்மீ 2வ விஷசுரத்தால் பீடிக்கப்பட்டு, வைப்பாற்றக்குக் கொண்டுபோய் வேண்டிய ஔஷதங்கள் கொடுத்தும் குணப்படாமல் ஷை மீ 9வ சனிக்கிழமை காலை சுமார் 10 1/2-மணிக்கு அப் பரலோகநாயகி நகரில் பரம பதமடைந்தார்கள். அவர்களின் சடலம் அன்றே நிம்பைமா நகர் கொண்டுவரப்பட்டு மறு நாள் ஞாயிற்றுக்கிழமை காலை கோவிலுக்குக் கொண்டுபோய் ரெக்குயம் பாடற்பூசை செய்து மையவாடியில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இவ்வுத்தம சீலரின் அகால மரணத்தால் நிம்பைநகர் துன்ப நகராய் மாறியது. அன்னேரின் பந்துக்களும் அளவிறந்த மித்ரர்களும் துக்கசாகரத்தில் அமிழ்ந்தினர். இதை விடப் பரிதாபகரமானதோர் மரணம் இதன்முன் எம்மூரில் நேர்ந்ததில்லையென்றே சொல்லவேண்டும். நியாயத்தையும், பெருந்தகமையையும்,தம்முயிரிலுமேலாய் மதிக்கும் குணமுடைய அம்மகான் எம் குலத்திற்கே யோராபரணமாவர். அப் புண்ணியவானின் தேகவியோகத்தால் விசேஷமாய் நிம்பைநகர் அடைந்துள்ள நஷ்டம் பரிகரிக்கப்பாலதன்று. எம் ஜாதி மக்களில் இவர்போன்ற புருஷோத்தமர் காண்பதரிது. இந்த க்ஷத்திரிய கனவானின் மரணத்தால் இக்கண்ணீர்க் கணவாயில் கலங்கிப் புலம்பும் அவர்கள் குடும்பத்தார் பந்து மித்ரர் யாவர்க்கும் எம்மின் அணைகடந்த அநுதாபம் கூறுவதுடன் அவ்வாத்தும இளைப்பாற்றிக்காகச் சகலரும் வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,
எம்மின் பிரதான ஆதரணைக் கர்த்தாக்களிலொருவரை யிழந்து பரிதபிக்கும்,
வேம்பார் பரதபாலிய சங்கம்.

எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாள் ஆலயத்திற்குச் சென்ற திருயாத்திரைக்காரரின் மரணம்.

சேலத்தைச் சார்ந்த எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாள் ஆலயத்திற்கு சேலம், சூரமங்கலம், ஏர்காட், ஜோலார்பெட், ஈரோட் முதலிய இடங்களிலிருந்து அநேக ஜனங்கள் வருஷா வருஷமும் திருயாத்திரையாய்ப் போகிறார்களென்பது பலருக்குந் தெரிந்த விஷயம். இவ்வருஷம் அவ்விடத்திய ஆற்று ஜலம் அசுத்தப்பட்டிருந்தபடியால் அதை அறியாமல் அருந்தினவர்களுக்குள் அநேகருக்கு விஷபேதி கண்டு சில ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் குழந்தைகளும் இறந்துபோனார்கள். என்ன பரிதாபம்! இவர்கள் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள கேட்டுக்கொள்ளும்,

C. A. ANTHONY PILLAY,
Engine Driver M. & S. M. Ry.,
3—4—18. *Bouringpet.*

குணம் அதிகம்! விலை சொற்பம்!

பற்கள் எப்போதும் வெளுப்பாகவும் உறுதியாகவும் இருக்க விரும்பினால்

புஷ்பம் கம்பெனியின்

"கல்நார்"

தந்தசுத்தி சூர்ணம்
உபயோகியுங்கள்.

பல்வலி, பல் ஆட்டம், பல்லரணை, சொத்தைப்பல், எகிறு வளர்தல், எகிறு கறைதல், வாய் நாற்றம், வாய்ப் புண், நாவு அரோசிகம் முதலிய குற்றங்களை நிவர்த்திசெய்து வாயில் மனோகரமான வாசனையை உண்டுபண்ணி மனதை உற்சாகப்படுத்துவதுடன் பற்களை வெளுப்பாகவும் உறுதியாகவும் செய்கிறது.

விலை டின் 1-க்கு ரூ 0—2—6. தபால் சார்ஜ் பிரத்தியேகம். மாதிரி வேண்டுவோர் அரை அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். புஷ்பம் அன் கோ.,
கீழத்தெரு, பாலக்கரை,
திருச்சினுப்பள்ளி.

அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மவுன்ட்ரோட், "நேப்பியர்" சிங்காரத்தோட்டத்தருகாமையில் அர்ச். அந்தோனியார் பேரால், அவருடைய பக்தர்களின் உதவியைக்கொண்டு நாம் கட்டிவந்த ஷை கோவில் ஒருவாறு முடிவாகி, சென்ற டிசம்பர்மீ 23உ மிகவும் சங்கைக்குரிய எமது அதிமேற்றிராணியாரால் மந்திரிக்கப்பெற்று அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று அவரால் அவ்வாலயத்தில் பெரிய பாடற்பூசை செய்யப்பட்டதென்று மிக்கச் சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் இதனுல் ஷை உபகாரிகள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இத்துடன் கோவில் வேலை முடிந்து போய்விட்டதென்று நினையாதீர்கள். தெய்வ பணிவிடைக்கேற்ற பூசைப் பாத்திரங்கள், பூசை வஸ்திரங்கள் முதலிய சாமான்கள் தேவையாயிருக்கின்றன. மேலும் பங்கு ஸ்வாமியார் வசிக்க ஒரு சிறு விடுதியும் அவசியம். இவைகளுக்காக மதிப்பிடப்பட்டிருக்கிற தொகை குறைந்தது 2.000 நூக்கு மேலாகும்—ஆகவே, நீங்கள் இதுகாறும் எமக்குக் கைகொடுத்து உதவினதுபோல இப்பவும் உதவி செய்வீர்களென்று நம்பியிருக்கும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள
சங். அருளப்பநாத சுவாமிகள்.

இதுவரையிலும் வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	4,626	11	6
Mr. R. J. நிக்கொலாஸ் (கோலார் கோல்ட்பீல்ட்ஸ்)	5	0	0
,, S. ஜெகராவு நாய்க்கர் (குலாலம்பூர்)	2	2	0
ஆக மொத்தம்,	4,633	13	6

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு சத்திரம்.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரம் தேவையென்பது நெடுநாளாய் அனுபவித்துவந்த குறை. வெளியூரிலிருந்து வரும் கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமின்றி தவிக்கவேண்டியதாயிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம்.

இக்குறையை நிவர்த்திக்க மயிலாப்பூர் மேற்றிராணியாருடைய அநுமதியின்பேரில் சங். எல். எக்ஸ். பெர்நாந்திஸ் சுவாமிகளின் தலைமை வகித்து ஒரு கமிட்டி சென்னையி லேற்பட்டிருக்கிறது. இக் கமிட்டியாரால் சிறுகச் சிறுக இதுவரையில் சேகரித்திருப்பது ரூ. 1,140—15—0 இத்தொகையைக் கொண்டும், கமிட்டி மெம்பரில் ஒருவருடைய கடன் கொண்டும் ரூ. 1,400 க்கு ஒரு சிறு இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு தக்க சிறு வீடாவது கட்டிமுடிக்க குறைந்தது ரூ. 5,000 ஆவது வேண்டும்.

இக்கருத்துக்காக கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்கள் தங்களால் கூடிய தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி இப்பொதுநலக்காரியத்துக்கு உதவி புரிவார்களென கோரப்படுகிறது.

	ரூ.	அ.	பை.
ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	1,358	15	0
பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் (எப்பிரல்மீ த்துக்கு) ...	30	0	0
ஆக மொத்தம்	1,388	15	0

Rev. Fr. L. X. FERNANDEZ,
North Georgetown,
Madras, E.

VICOMA BALM! VICOMA BALM!

விக்கோமா பாம்! விக்கோமா பாம்!

காலஞ்சென்ற சங். ஹாஸ் சுவாமிகளின் ஞாபகார்த்தமாய் ஏற்படுத்தப்பட்டது.

இடுப்புவலி, பக்கசூலை, பாரிசவாய்வு, தொண்டைநோய், தலைவலி, இருமல், சைகால் பிடிப்பு மு,லிய நோய்களுக்கு எற்ற வெளிப்பூச்சு தைலம்; தவருத ஆரோக்கியம் தரத்தக்கது. மற்றெல்லாவித தைலத்தைவிட மேலானது. இதை யுபயோகித்துப் பார்த்தவர்களுக்கே இதன் அருமை நன்கு விளங்கும். கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் வேறு வித தைலத்தை வாங்குமுன் இதை ஒரு விசையாவது வாங்கி பரீட்சித்துப் பார்ப்பார்களாக.

விலை ஒரு டப்பி பாம் அணு 10, தபாற்கூலி பிரத்தியேகம் இதை, யுபயோகிக்கும் விவர மடங்கிய துண்டு பத்திரம் மருந்துடன் சேர்த்து அனுப்பப்படும், வெளியூர் ஆர்டர்களுக்கு விசேஷ கவனஞ் செலுத்தப்படும்.

எம். பி. குழந்தைசாமி பிள்ளை,
2/74 நெம்பர் வீடு, பிராட்வே, மதருஸ்.

இன்பமான நாவல்கள்! நாவல்கள்!!



இராஜாமணி.—தமிழ் நாவல். இந்த அருமையான நாவல் வெகு இன்பமான எளிய நடையில் எழுதியுள்ளது. சிரிப்பும், வேடிக்கையும், புத்தியும், உண்டாகக்கூடிய அலங்காரமான நாவல் 153-பக்கம் அடங்கியது. விலை அணா **12.**

தானவன்.—துப்பறியும் அற்புத நாவல். தானவன் என்ற போலீஸ் நிபுணன் கண்டுபிடித்த அற்புத கேசுகள். பண்டித நடேச சாஸ்திரியால் இயற்றப்பட்டது. இதில் 5 நாவல்கள் அடங்கியது. இதுவரையில் இம்மாதிரி புஸ்தகமே தமிழில் கிடையாது இது புத்தியும், சூக்ஷுமும், அதிசயமும் அடங்கிய நாவல். 300-பக்கம் அடங்கியது. விலை அணா **15.**

பிமலா.—வெகு இன்பமான நடையில் எழுதியுள்ள தமிழ் நாவல். வாசிப்பவர் மனம் களிக்கச்செய்யும்படியானதும், புத்தி புகட்டக்கூடியதுமாயிருக்கிறது. பல வேலைகளால் அயர்ச்சியடைந்தவர்க்கு 'பிமலா' அவ்வயர்ச்சியைப் போக்கி மகிழ்ச்சியை ஆக்குமென்பதில் ஐயமில்லை. விலை அணா **10.**

ஒரு ரூபாய்க்கு குறைவான சாமான் ஆர்டர் செய்கிறவர்கள் புஸ்தகத்தின் கிரயம், அத்தோடு தபால்கூலி அணா 4-ம் சேர்த்து தபால் ஸ்டாம்பு அனுப்பினால் புஸ்தகம் அனுப்புவோம். ஒரு ரூபாய்க்கு அதிகமான சாமான்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

ச. பி. பாய்வ, **X. P. PAIVA,**

நெ. 7. கன்னாரத் தெரு. கொழும்பு. No. 7. Brass Founder Street, **Colombo.**

NOTICE.

உத்தரியங்கள் ! ஜெபமாலைகள் !

I. கருப்பு சாதா கர்மேல் உத்தரியம் மட்டம் குரோஸ் ரூ 3—4—0. மேற்படி அகல நாடா உள்ளது ரூ 4—0—0. நீல உத்தரியம் குரோஸ் ரூ 5—0—0.

II. 48-படங்கள் அடங்கிய கருப்பு உத்தரிய சேலைகள் முதல்தரம் ஒன்று அணா 0—2—0. டஜன் ரூ 1—6—0. மேற்படி மட்டம் ஒன்று அணா 0—1—6.

III. ஜெபமாலைகள்.—சாம்பல் நிறமுள்ள இந்திய கோறைபாசி கொட்டை ஜெபமாலை 21 அங்குலம், டஜன் ரூ 1—12—0. கருப்பு இந்திய காருமணிக்கொட்டை ஜெபமாலை சிறியது 18 அங்குலம் டஜன் ரூ 2—0—0. மேற்படி பெரியது 24 அங்குலம் டஜன் ரூ 3—0—0. பளிங்கு மணி, கருப்பு, பச்சை, நீலம், வெள்ளை பலவர்ணம் உள்ளது 12 அங்குலம் டஜன் ரூ 1—10—0. பளிங்கு பெரிய வெள்ளை மணி 20 அங்குலம் டஜன் ரூ 3—0—0. கல்முத்து வெள்ளை மஞ்சள் ஜெபமாலை 12 அங்குலம் டஜன் 2—0—0. ஒலிவ் கொட்டை சீமை ஜெபமாலை 14, 16, 21 அங்குலம் டஜன் ரூ 2—0—0, 2—8—0, 3—8—0.

IV. அலுமினிய உத்தரிய சுரூபம் டஜன் அணா 0—9—0, 0—12—0. ரூ 1—0—0.

V. பித்தளை கில்ட் உத்தரியமாதா, ஆசீர்வாதப்பர் மற்ற அர்ச்சியசிஷ்டவர்கள் சுரூபங்கள் டஜன் அணா 0—5—0, 0—6—0, 0—8—0.

VI. சீமை மண் சுரூபங்கள்.—இருதயநாதர், அந்தோனியார், மாதா etc. 9 அங்குலம் ஒன்று 2—0—0.

VII. மர பாடுபட்ட சிலுவைகள் 1 அடி ரூ 1—8—0. 1½ அடி ரூ 2—8—0. 2 அடி ரூ 3—8—0.

VIII. முழு வர்ணம் ஏற்றிய வார்னிஷ் படங்கள் 17×13 அளவு டஜன் ரூ 2—4—0. 25×18 அளவு ஒன்று ரூ 1—8—0. 29×22 அளவு ஒன்று ரூ 2—0—0. அர்ச். ஆரோக்கிய மாதாவின் பாதுகாவலின் படம் கெட்டியான அட்டையில் அச்சிட்டது ஒன்று அணா 0—1—6. டஜன் ரூ 1—0—0.

சாமான் வேண்டியவர்கள் தங்கள் விலாசத்தையும் சாமான் விவரங்களையும் பூராவாகவும் திருத்தமாகவும் எழுதினால் மேற்படி சாமான்களை V. P. மூலியமாய் அனுப்பப்படும்.

தி. லூயிஸ் அண்டு கோ.,
பெரியகடை வீதி, திருச்சினாப்பள்ளி.

லீலியும் ரோசாவும்.

ஆதி திருச்சபையில் அஞ்ஞான மார்க்கத்திலிருந்து மனம் திரும்பின இரு செல்வமாது சிரோன்மணிகளைப்பற்றிய இச் சரித்தையானது 417-பக்கங்கள் அடங்கியது. இஃது திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையில் பேர்பெற்று காலஞ்சென்ற பிரான்ஸிஸ் பில்லியர்டு சுவாமியார் அவர்களுடைய ஞாபகத்துக்காக, அவர்களுடைய கிறீஸ்துவ மாணாக்கர்களில் ஒருவரால் எழுதப்பட்டது. புஸ்தகம் வேண்டுவோர் மதுரை செண்ட் மேரிஸ் ஸ்கூல் உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ சூசை கோவிந்தராவுக்காவது அல்லது நல்லாயன் அச்சியந்திரச்சாலை மானேஜருக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால்கூலி அன்னியில் இந்தியாவில் எந்த இடத்திற்கும் விலை 12 அணா இதர நாடுகளுக்கு விலை ரூபாய் 1. சூசை கோவிந்தராவ், ஏஜண்டு, மதுரை.

LAGHIAM DEPOT.

No. 44. Nomboolyar Street, Sowcarpet, Madras.

பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்க பலத்தைத் தருவதெது?

அமிர்த சஞ்சீவி லேகியமும், அயக்காந்த செந்தூரமுமே.

இதை அவசியம் முழுதும் வாசியுங்கள்.

(முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும், தேகபலத்தை தரும் ஔழதம் வேறொன்றுமில்லை.)

விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரமானது சாமான்யமானதன்று; அபாரமான சத்துவத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளது. உறுதியாய் இதை நம்பி ஒரே தடவை வாங்கியுண்ண எமது மருந்தின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

இந்த லேகிய செந்தூரத்தால் நிவர்த்தியாகும் முக்கிய குணங்களாவன.

துர்நடத்தையா லுண்டாகும் 20-வகை மேகரோகங்கள், சூலை ரோகம், குன்ம ரோகம், பித்த பாண்டு, கைகால் முடக்கு, ஒடு வாய்வு, பித்த எப்பம், நெஞ்சு, தொண்டை எரிச்சல், வயிறு உப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாது ஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர் வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும்தந்தி மேகம் முதலியவைகளை ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீக்கிவிடும். பயங்கரமான மேக வெட்டை சம்பந்தமான வியாதிகளை பத்தே வேளையில் முழுதும் குணமாக்கி சப்த நரம்புகளை மிக முறுக்கேற்றி அபரிமிதமான ரத்த விர்த்தியைப் பெருக்கி சக்தியைத் தருவதில் இதற்கு மிஞ்சின லேகிய பஸ்பம் வேறொன்றில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் இளைத்த தேகத்தை புஷ்டியாக்கி தேக தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதியைக் கண்டித்து, தினந்தோறும் பலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரமே முதன்மையான தென்பதை எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க இந்த லேகிய செந்தூரமானது மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்தியாக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கியுண்ண இதன் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம் மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரத்தை எவ்வளவு சிறப்பித்து கூறியபோதிலும் தகும். தவிர இதை நோய் உள்ளவரேதான் சாப்பிடவேணும் என்ற அவசியமில்லை. யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் லேகிய செந்தூரத்தை யாதும் பத்தியமின்றி சாப்பிட சாவளவும் துர்பலமே ஏற்படாது. இது சத்தியம். தருவித்து எண்ணிக்கையாக சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் தராவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் வாங்கிய பணம் வாபஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய் உடையோர் 48-நாள் சாப்பிடுவார்களேயானால் முழுதும் குணமாகிவிடும். அப்படி குணம் தராவிடில் யாங்கள் உத்திரவாதியாவோம். அதாவது யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரத்தை எவ்வளவோ சிரத்தையுடன் நல்ல பெயர் வாய்க்கும்பொருட்டு கொஞ்சமேனும் திரேக சிரமம் பாராமல் எம்மால் கூடிய வரையில் கஷ்டப்பட்டு முடித்து பரோபகார்த்தமாக ஜனங்கள் வாங்கியுண்டு திரேகத்தை பொன்மய மாக்கிக்கொண்டு நீடூழிகாலம் வாழ்வார் என்னும் அபிப்பிராயத்தால் உண்மையில் இதை வெளியிட்டோம். இந்த லேகிய செந்தூரமானது (போலிப்பண்டித பொய்யர்களாகிய வைத்திய வாசனையே யில்லாத சில தாந்தோன்றி தப்பிரான்கள் பணத்தை கவரும்பொருட்டு வெளிப்படுத்தும் விளம்பரத்தில் இதுவும் ஒன்று என எண்ணவேண்டாம்.) இவ் வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்திற்கு பொன் மெடல், வெள்ளி மெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்கள் பெற்றிருக்கிறோம். எமது லேகிய செந்தூரத்தை உண்டவர்

உடனே எமது கம்பெனிக்கு யாம் கோராதபடியே ஏஜண்டாய் நாடுவோர்கள். இது உண்மை. அப்படி ஏஜண்டாய் சேருவோருக்கு மருந்துகட்கு மட்டும் 100-க்கு 25 கமிஷன் தரப்படும். அப்படி ஏற்பட்டபோதிலும் மாதத்திற் கொருவிசை கணக்கு பைசல் செய்யப்படும். எமது லேகிய செந்தூரமானது யாம் சொன்ன வரையில் குணத்தைக் கொடுக்கிறது என்றதைப்பற்றி எத்தனைதரம் பிரமாணம் செய்யச் சொன்னபோதிலும் காத்துக்கொண்டிருக்கிறோம். இது உண்மை. ஒரேதரம் தருவித்து பாரும் எமது உண்மை நன்கு விளங்கும்

வாதாதிக்க தோஷத்தினாலாவது. தரப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, ஸ்திரீ வியாதியினாலாவது. மற்றெந்தக் காரணத்தினாலாயினும் பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷை பண்டிதருடைய லேகிய செந்தூரத்தை புசிப்பார்களானால் தேகாரோக்கியம், வலிவு. அழகு முதலியது பெற்று ஆநந்தத்தில் மூழ்கும்படிச் செய்யுமென்பதில் தடையே யில்லை.

வெளியூர் கனவான்கள் இந்த லேகியத்தில் முழுநம்பிக்கைவைத்து ஒரே வொருதரம் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அடையும் ஆநந்தத்திற்கு அளவேயில்லை. லேகிய செந்தூரத்தினாலுண்டாகும் அற்புத குணத்தைத் தெரிந்துகொண்டபின் நமது லேகியத்துக்குச் சிபார்சு செய்யும்படி உங்களை நாம் கேட்டுக்கொள்ளாமலே உங்கள் பந்துக்கள், நேசர் முதலியவர்க்கு நீங்களே ஷை பண்டிதருடைய லேகிய பஸ்பத்தின் சிறந்த குணத்தையும், நீங்கள் அதனாலடைந்த ஆனந்தத்தையும் எடுத்துக்கூறி சிபாரிசு செய்வீர்கள் என்பது நிச்சயம்.

இந்த லேகிய செந்தூரத்திற்கு பத்தியமே கிடையாது. சகலமும் நீக்குதலின்றி மருந்து சாப்பிடும் காலத்தில் வயிற்றிற்கு துரோகம் செய்யாமல் சாப்பிடவேண்டியது. ஏனென்றால் பசி அதிகமாய் எடுக்கும். பச்சைபயறு கொழம்பு. தயிர், பால், கறி, மார்க்கண்ட சூப்பு. நெய் இவை அதிகமாய் தேகத்தை தணிக்கக்கூடிய விதமாய் தாமதம் செய்யாமல் சாப்பிட்டு வரவேண்டியது. பசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால். நெய் முதலியவைகள் எருமைப்பால். பசும்பால், ஆட்டுப்பால் எதுவாயிருந்தாலும் சந்தேகமின்றி சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்தை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவார்களேயானால் அது தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி தேகமானது வலுத்து புதியரத்தம் பரவி தன் வாழ்நாள் பரியந்தம் தேகமானது இளைக்காமல் முற்றிலும் அக்களிப்போடு ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இதை புருஷன் பெண்சாதி இருவர் ஏககாலத்தில் ஒற்றுமையாய் சாப்பிட்டு வந்தார்களேயானால் உதிக்கு மக்கள் யாதொரு நோய் இல்லாதபடி ரொம்பவும் தேஜசாய் தோன்றுவார்கள். இதைப்பற்றிப் பிரமாணமாய் சொல்லுவோம். நல்ல வாலிபதசையைக் கட்டாயம் அடைவார்கள். இது உண்மை. இதைப்பற்றி இன்னும் எழுத முடியாது.

24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ 1—12—0.

போஸ்டேஜ் அணா 4.

ஒரே காலத்தில் 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் இனாம்.

கிருஷ்ண சஞ்சீவி.

தலைநோய், பாரிசவாய்வு, சுளுக்கு, புண்கள், காயங்கள், வீக்கங்கள், கொப்பளங்கள், கட்டிகள், இருமல், மூச்சடைப்பு, தேள்கொட்டின விஷம் இவைகளுக்குத் தேவதாப்பிரசாதம். நோய்கண்ட இடத்தில் இந்த கிருஷ்ண சஞ்சீவியை நன்றாய் இரண்டு மூன்று நிமிஷம் தேய்த்தால் உபாதை மாயமாக பறந்து ஓடிவிடும். இதற்கு சமமான மருந்து வேறே எதுவும் கிடையாது. இளங் குழந்தைகளுக்குக் காணும் சைத்திய நோய்களுக்கு உபயோகிக்கலாம், ஆயிரக்கணக்காகச் செலவழிந்துகொண்டு வருகிறது. ஒவ்வொரு க்ருஹத்திலும், பிரதி பிரயாணிகள் கையிலும் இந்த கிருஷ்ண சஞ்சீவி இருந்தே தீரவேண்டும்.

இதன் விலை புட்டி 1-க்கு அணா 8.

டஜன் 1-க்கு ரூபா 5—0—0.

கண் மருந்து.

கண்நோய், கண்குத்தல், கூசல், நீர்வடிதல், மங்கல், அந்திமாலை. பீளைகட்டல், சதை வளர்ந்திருத்தல், கண்சிவப்பு, எரிச்சல், கண் இமைபுருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணுக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் வெகு சிறந்த அவுஷதம். இதை உபயோகித்தால் கண்ணாடி போடவேண்டியதில்லை. புட்டி 1க்கு அணா 8.

எமது விலாசம் :— **லேகியம் டிபோ,**

நெ. 44, நம்புலையர் வீதி, சௌக்கார்பேட்டை. மதராஸ்.